OFFICE OF THE REGISTRAR ... MADRAS
26 APR 1948

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா



| ஸம்புடம் 7 | ஸர்வதாரி ஸு சித்திரை மீ | ஸஞ்சிகை 4 |
| --- | --- | --- |



“அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥”

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாரூபா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

---::O::---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

வ்யவஸாயன்:-ஸ்வாமி! இந்த அக்ஷரமாலை அத்யத்புதமானது.

“ப்ரத்யாதிஷ்டபுராதநப்ரஹரணக்ராம: க்ஷணம் பாணிஜை—
ரவ்யாத் த்ரீணி ஜகந்த்யகுண்டமஹிமா வைகுண்டகண்டீரவ: ।
யத்ப்ராதுர்பவநாதவந்த்யஜடரா யாத்ருச்சிகாத்வேதஸாம்
யா காசித் ஸஹஸா மஹாஸுரக்ருஹஸ்தூணா பிதாமஹ்யபூத் ॥”

இது தசாவதார ச்லோகம். ‘வைகுண்டகண்டீரவ:’—‘வைகுண்டர்’ என்று பகவானுக்குப் பெயர். ‘உதூம் ஜஹாஸ வைகுண்ட:’ என்று பாகவதத்தில், குந்தியின் அழகிய துதிப் பேச்சைக் கேட்ட கண்ணனுடைய புன்சிரிப்பை வர்ணிக்கையில், க்ருஷ்ணனுக்குத் திருநாமமாக ‘வைகுண்ட’ பதம் உபயோகிக்கப்பட்டது. ‘அளவிற் கடங்காதது’ என்ற அவயவப் பொருளை இங்கே ‘அகுண்ட மஹிமா’ என்பதால் விளக்குகிறார்.

‘வைகுண்டீயே து கண்டே வஸது மம மதி: குண்டபாவம் விஹாய’

என்பது ஹரி பாதாதி கேசாந்த ஸ்தோத்ரத்தில் பகவானுடைய மஹத்தான ‘அண்ட ரண்ட பகிரண்டத் தொருமாநில மெழுமால் வரை முற்று முண்ட கண்டத்தில்’ தம்முடைய மனம் அளவற்ற அநுபவத்துடன் ரமிக்கவேணுமென்று ப்ரார்த்தித்தார். கண்டமே வைகுண்டமாகும். இந்த ந்ருஸிம்ஹ ரூபம் வைகுண்டமே. இவர் மஹிமையும் விகுண்டம் (அளவற்றது.) உள்ளும் புறமும் எங்கும் வ்யாபித்திருக்கும் விஷ்ணுத்வ மென்னும் தத்வத்தையே நாஸ்திக அஸுர பக்ஷத்தை நிரஸித்து உலக மறிய மூதலிக்கவும் இந்த அவதாரம் ஏற்பட்டது. ‘அகுண்ட மஹிமா’ என்பது, ஸர்வ வ்யாப்தியையும் விச்வத்தைச் சூழ்ந்து, அதனினும் விஸ்தாரமான பரப்பையும் காட்டுகிறது. ந்ருஸிம்ஹ ரூபியாகவே எல்லாப் பொருள்களி னுள்ளும் கர்ப்பத்தில் வ்யாபித்துள்ள ரென்றும் கருத்து. இக்கருத்து வரதராஜ பஞ்சாசத் ச்லோகத்தில் பரக்க விஸ்தரிக்கப் பட்டுள்ளது. இங்கே வைகுண்ட ஸிம்ஹமாகவே எங்கும் எல்லாப் பொருள்களி னுள்ளும் வ்யாபித்திருப்பதை ‘அகுண்டமஹிமா வைகுண்டகண்டீரவ:’ என்று சேர்த்துப் படிப்பதால் ஸூசிக்கிறார். ‘த்ரைலோக்யமும் நரஸிம்ஹனைக் கர்ப்பத்தில் தரித்திருப்பது திண்ணம்; மஹாஸுரன் வீட்டுச் சாலைத் தூண் ஒன்று மட்டும் ப்ரஸவித்து அவரை வெளிப்படுத்தியது; மற்ற உலகமெல்லாம்

அவரை ப்ரஸவிக்காமல் கர்ப்பத்திலே உள்ளது.' 'எங்கே காட்டச் சொல்லு வனே பொல்லா வரக்கன்?' என்று எங்கும் நரஸிம்ஹ ரூபமாகவே எல்லாப் பொருள்களின் உள்ளும் வ்யாபித்து விட்டார். 'ஸ்தம்பைகவர்ஜம்' என்று பஞ்சாஶத்தில் கூறியதை, இந்த ச்லோகத்தின் பிற்பாதியில் விஸ்தாரமாக வர்ணிக்கிறார். அகடித கடனையே நிறைந்தது இவ்வவதாரம். 'ஸுதந்த்ரோத்தம்' என்பது சுகர் வர்ணநம். இவர் நிராயுதராகக் கிளம்புகையில் வைகுண்டத்தை விட்டுப் பிரியாத ஆயுத ஸமூஹம் (ப்ரஹரணக்ராமம்) தங்களை அழைத்துத்தான் போகவேண்டுமென்று மல்லுக் கட்டுவதைத் தள்ளி விலக்கி நிறுத்தி விட்டுக் கிளம்பவேண்டி யிருப்பதையும், அப்படி நிறுத்துவதில் திருவாயுதங்களுக்கும் பெருமாளுக்கும் நடந்த வாதத் தகராறும் இங்கே ச்லோக பதங்களால் அழகாக ஸூசிக்கப்படுகின்றன. பலிஷ்டமான ஶத்ருவோடு போர் புரிவது இவருக்கு ஒரு ச்ரமத்தையும் தரவில்லை; தமக்கு அநுகூலரான நித்யாச்ரிதரான ஆயுதப் படைகளை நிறுத்துவதில் தான் அவருக்குப் பெரிய ச்ரமம் இருந்தது.

சிரந்தந வ்யூஹரண ஸ்ராஜ:—'நாங்கள் புராதநமான படைவீரர்; புராதநமான போர்ச் சேவகர்; நித்யஸூரிகளான சேதநாயுதங்கள். நாங்கள் உம்மைத் தனியே விட்டுப் போகமாட்டோம். எங்களுடைய அநாதியான நித்ய போர்ச் சேவக மிராசு ஊழியத்தை நாங்கள் விடுவோமோ? பண்டைக் காலந்தொட்டு எத்தனை போர்களில் பணி செய்தோம்? ஆயுத மில்லாமல் என்றைக்காவது நீர் போர் செய்த துண்டோ?' என்று அவ்வாயுதங்கள் முறையிடுவதை 'சிரந்தந' என்பதால் ஸூசிக்கிறார்.

வ்யூஹரண—'நாங்கள் உமக்கு அலங்காரங்கள் அல்லவே! ஆயுதங்களல்லோமோ? உமது திருமேனியை நாங்கள் என்றாவது விட்டிருப்போமோ? சண்டை வந்தபோது பூஷணங்களைக் கழற்றி வைக்கலாம்; நித்யமாய்த் திருமேனியில் ஒட்டியிருக்கும் ஆயுதங்களைக் கழற்றிவைத்து விட்டுப் போகலாமா?'

ஸ்ராஜ:—'எத்தனை ஆயுதங்கள் இருக்கிறோம்? சிலரையாவது அல்லது ஒருவரையாவது கூட்டிச் சொல்லலாகாதோ?' 'வ்யுதஸ்யாதிஷ' என்னும் சொல், இவர்கள் இஷ்டத்துக்கு விரோதமாக இவர்களை நின்றுவிடும்படி ஆதேஶம் (உத்தரவு) செய்வதையும், இவர்களை நிராகரணம் செய்வதையும், இவர்களுக்குப் பதிலாகப் 'பாணிஜங்கள்' என்கிற நகங்களை ஆயுத ஸ்தாநத்தில் வைத்துக் கொள்வதையும் காட்டுகிறது.

வாணிஜை: வ்யுதஸ்யாதிஷ வ்யூஹரண ஸ்ராஜ:—இப்படித் திருவாயுதங்கள் மல்லுக்கட்ட, 'உங்களை விட்டுப் பிரிதல் ஒரு க்ஷணமே; இதோ திரும்பி வந்து விடுகிறேன்' என்பது 'க்ஷணம்' என்பதால் காட்டப்படுகிறது. வாணிஜை:—'உங்களுக்குப் பதிலாக வேறொருவரையும் ஆயுதப் பணியில் வைப்பதில்லை; என் உடம்பிலுள்ள நகங்களே தான் ஆயுதப் பணியைச் செய்யும்; உங்களுக்குப் பதிலாகப் பணிசெய்வது என் கை நகங்களே' என்று கைகளைத் தூக்கி நகங்களையும் காட்டி, 'நில்லுங்கள், வரவேண்டாம்' என்று அடையாளம் செய்கிறார். கை

நகங்களைத் தூக்கிக் காட்டுவதில் வராமல் நிற்கும்படி ஜாடையும், அத்புதமான பகவான் நகங்களே இருப்பதால் அவர்கள் பயப்படாதிருக்கும்படி அபய முத்ரையும், தங்களுக்குப் பதிலாயிருப்பது ஸ்வாமி நகங்களே யல்லது வேறு பணியாளர்கள் இல்லை என்பதும் காட்டப்படுகின்றன. 'வாணிஜை: வ்ருதத்ராஷிஷ்' என்றதால் இத்தனை கருத்துக்களும் தெளிவாகின்றன. வரவேண்டாமென்று நிறுத்துவதற்கும் கை ஜாடையே; அஞ்ஜலியென்று அபயம் தரவும் அதே கை ஜாடையே. இப்பெருமாள் ஒரு க்ஷணகாலம் அவதாரம் செய்து மறைந்துவிட்டாலும், இவரை மனக்கண்ணால் ஸேவித்து ப்ரார்த்திப்பதால் மூன்று லோகங்களும் ஸ்திரமாய் ரக்ஷணம் பெறலாமாதலால், 'ஸவ்யாத்' என்று ஆஶாஸநம் செய்கிறார்.

யஸ்தம்பஸம்பவநாஸ—இவர் அவதாரம் அத்யத்புதம். மஹாஸுர க்ருஹத்திலுள்ள ஒரு தூண் திடீரென்று ஒரு க்ஷணத்தில் 'பிதாமஹர்' என்று பெயர் கொண்டு, பல அண்டத்து ப்ரஹ்மதேவர்களுக்குப் பிதாமஹி யாயிற்று. ப்ரஹ்மதேவர்க்குப் பகவான் பிதா. அநேக அண்டங்களுக்கு அநேக ப்ரஹ்மாக்கள் உண்டு. அத்தனை ப்ரஹ்மாக்களுக்கும் ந்ருஸிம்ஹன் பிதா. அந்த ந்ருஸிம்ஹனைக் கர்ப்பத்தில் கொண்டு ப்ரஸவித்ததால் இத்தூண் பாட்டி யாயிற்று. கர்ப்பம் தரித்ததும் ப்ரஸவித்ததும் திடீரென்று. 'ஸஹஸா'— அதிவேகமாக.

யாத்ருச்சிகாத் ஸ்தம்பஸம்பவநாஸ—இத்தூணிலிருந்து இவருடைய வெளிப்பாட்டுக்குக் காரணம் யாது? யார் இச்சை? மஹாஸுரன் இச்சை; இவர் இச்சை. அதர்க்கிதம். அவன் புத்தியில் ஏதோ அகஸ்மாத்தாய் தன் மாளிகையில் உள்ள ஒரு தூணைச் சுட்டிக் காட்டி, 'இத்தூணி லிருக்கிறானா?' என்று கேட்கத் தோன்றிற்று. ப்ரஹ்மாக்களுக்குப் பிதாமஹர் என்று பெயர். பாட்டனார்களுக்குப் பாட்டியாயிற்று என்று வேடிக்கை. அஸுரன் வீட்டின் அசேதநமான தூண் சேதநர்க்கெல்லாம் சேதநனை ஈன்றது; தேவ தேவனை ஈன்றது. 'ஸுதம் மஹா பாகவதம் மஹாஸுர:' என்றார் சுகர். மகன் எத்தனை பெரிய பாகவதனோ, அத்தனை மஹத்தான அஸுரன் தகப்பன். 'மஹாஸுர' என்பதால் பாகவத வசநத்தைக் காட்டுகிறார்.

யாசாதிக்ஷு ஸஹஸா—அவன் எந்தத் தூணைக் காட்டிக் கேட்பனோ, அவன் குறித்துக் கேட்பதைக் கொண்டு, இப்படி உள்ளிருந்து வெளியே வரவேண்டியிருந்தது.

ஸர்வத்ரஜாதா—எல்லாத் தூண்களிலும் எல்லாப் பொருள்களிலும் ந்ருஸிம்ஹன் உள்ளே கர்ப்பம் போல் வீற்றிருந்தாலும், ஒரு தூணே (முலடியாயிராமல்) ப்ரஸவித்தது. ஒரு தூணுக்குத்தான் அந்தப் பாக்யம் கிடைத்தது.

ஸுமதி:—ஹிரண்யனைப் போன்ற இந்த மஹாமோஹாஸுரனைப் புருஷ ஸிம்ஹா ரண நீர் பிளந்தெறிய வேண்டும்.

வ்யவஸாயன் :—தேவி உரைப்பது உசிதமே. த்ரைலோக்ய ராஜ்யத்தை அபஹரித்து விட்ட பலி என்னும் அஸுரனிடமிருந்து தேவ கணத்தின் ஸந்தோஷத்திற்காகத் திவ்ய வாமந வேஷத்தோடு இதோ பகவான் ஸேவை ஸாதிக்கிறார்.

ராஜா :—இவரிட மிருந்து உலகத்துக்கு மங்களத்தை ஆசாஸநம் செய்வோம்.

“ 𑌵𑍍𑌰𑍀𑌡𑌾𑌵𑌿𑌧𑍍𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌦𑌾𑌨𑌵𑌯𑌶𑍋 𑌨𑌾𑌸𑍀𑌰𑌧𑌾𑌟𑍀𑌭𑌟
𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌯𑌕𑍍𑌷𑌂 𑌮𑌕𑍁𑌟𑌂 𑌪𑍁𑌨𑌨𑍍𑌨𑌵𑌤𑍁 𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍋 𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌃 ।
𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌾𑌵𑌸𑌮𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌧𑍍𑌵𑌜𑌪𑌟𑍀𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌿𑌭𑌿𑌃
𑌸𑍍𑌰𑍋𑌤𑍋𑌭𑌿𑌃𑌸𑍁𑌰𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌰𑌷𑍍𑌟𑌸𑍁 𑌦𑌿𑌶𑌾𑌸𑍌𑌧𑍇𑌷𑍁 𑌦𑍋𑌧𑍂𑌯𑌤𑍇 ॥ ”

இதுவும் தசாவதார ஸ்தோத்ர ச்லோகம். 𑌵𑍍𑌰𑍀𑌡𑌾 – வெட்கம். கொடுக்கிறவர் வெட்கத்தோடு கொடுக்கவேண்டு மென்று உபநிஷத் கூறிற்று. [‘𑌹𑍍𑌰𑌿𑌯𑌾 𑌦𑍇𑌯𑌮𑍍’] யாசகர் வெட்கப்படுவது உலகத்தில் உண்டு. கொடுக்கிறவர் வெட்கத்துடன் கொடுக்கவேண்டுமாம். ‘𑌵𑌦𑌾𑌨𑍍𑌯𑌃’ என்று தாராளமாய்க் கொடுக்கிறவரைச் சொல்வர். ‘𑌵𑌦 𑌵𑌦𑌾𑌨𑍍𑌯’—‘இன்னம் கேள், இன்னம் கேள்’ என்று அவர்கள் சொல்வர். பகவான் ஔதார்ய குணத்தில் மிக்க ரஸ முடையவர். அவர் மஹோதாரர்; பலியின் வெட்கக் குணம் பகவானுடைய மனத்தில் தைத்தது. பலியின் வதாந்ய குணம், அவன் யசஸ்ஸைத் தாமே வெண் கொடிகளைத் தூக்கிக்கொண்டு நடந்தது. உலக மெங்கும் பரவச் செய்யவேணு மென்ற ஆசையை உண்டாக்கிற்று. ‘என்னிடம் மூவடி மண்ணா கேட்பது? ஒரு த்வீபம் கொடுப்பவனிடம் இப்படி அல்ப த்ரவ்யம் கேட்கலாமோ? வேண்டிய பூமியைக் கேளும்’ என்று பலி சொன்னான். ‘வதாந்யனான உம்மிடம் நான் வேறொன்றும் கேட்கமாட்டேன்’ என்றார் வாமநர். ‘𑌵𑌦𑌾𑌨𑍍𑌯’ பதத்தால் இவைகள் ஸூசிக்கப்படுகின்றன.

𑌦𑌾𑌨𑌵—அஸுரன் இப்படி மஹோதாரனாய் இருக்கின்றானே யென்று இத்தருணத்தில் வாமனருக்கு இன்னும் ஈடுபாடு அதிகமாயிற்று. தம்மிடம் யாசிப்பவரையும் உதாரரென்று கொண்டாடுவது பகவான் ஸ்வபாவம். பகவான் யாசகராகி, அவருக்கு வெட்கத்துடன் கொடுக்கிறவனும், ‘வேறே உயர்ந்ததைக் கேளும்’ என்று சொல்பவனுமான தாநவனிடம் எப்படி மிக்க கௌரவம் உண்டாகாம லிருக்கும்? இவனுடைய கீர்த்தியைத் தாமே காலாளாக நடந்து வெண் கொடியைத் தூக்கி அஷ்ட திக்குக்களிலும் பரப்பவேண்டு மென்னும் ஆசை பகவானைப் பிடித்துக் கொண்டது. யசஸ்ஸு தானே ஸ்வயமாகப் பரவி விடும். அது தானாகப் பரவி விட்டால், பகவான் தன் விரோதி யஸுரனின் யசஸ்ஸை பரப்பின குணம் தன்னிடம் ப்ரகாசிக்காது. அவன் யசஸ்ஸை எல்லாத் திக்குக்களிலும் பரவும்படி செய்ய த்வரைப்படுகிறார்.

நாஸீரயாஷ்டி:–நாஸீர மென்பது ஸேனையின் முன்புறம். பலியை ஜயிக்க வந்தவர், அவனுடைய உதார குணத்தையும் வெட்கத்தையும் கண்டு தோற்று, அவன் ஸேனைக்கு முன் ஒரு காலாளாக அவன் கொடியைத் தூக்கிக்கொண்டு போகும் படனைப் போலாகி, அவன் கீர்த்திக் கொடியை உயர ஆகாயத்தில் தூக்கி எட்டுத் திக்குக்களிலும் வீசிப் பரவும்படி செய்தார். ஓங்கி நிமிர்ந்த பாதம் கொடி மரம். இரண்டாவது திருவடி க்ரமணத்தில் ஒரு காலை ஆகாய மளவும் உயரத் தூக்கினர். அது ப்ரஹ்ம லோகமளவும் ஓங்கிற்று. ப்ரஹ்ம தேவர் அங்கே நீண்டு வந்த திருவடியில் தம் கமண்டலுவிலிருந்து தீர்த்தம் சேர்க்க, அத்திருவடியிலிருந்து கங்கை ப்ரவஹித்தது. ஆகாயத்தில் ப்ரஹ்ம லோகத்திலிருந்து கங்கையின் வெண்மையான ஜல ப்ரவாஹங்கள் தாரைகளாக எட்டுத் திக்கிலும் விழுந்து வ்யாபிக்கையில், அவை உப்பரிகை உச்சிகளில் வெண் கொடிகள் நாட்டிப் பரப்புவது போலும், மஹாபலியின் தாத்ருத்துவ யசஸ்ஸை ஸர்வ திக்குக்களிலும் ஆகாயத்திலிருந்து பரப்புவது போலும் இருந்தன. அந்த ப்ரவாஹம், கீழே பாய்ந்து விழுவது, த்ரிவிக்ரமன் திருவடி ஆகாயத்திலிருந்து கங்கா ப்ரவாஹ பதந ரூபமாகப் பலியின் கீர்த்திக் கொடியைத் திகந்தங்களிலும் வீசிப் பரவும்படி செய்தது. கங்கை, தேவலோகத்திலும் பூலோகத்திலும் பாதாளத்திலும், முறையே கங்கை, மந்தாகிநீ, போகவதீ என்னும் பேர்களுடன் ப்ரவஹிக்கிறது. மூவடி அளந்த உலகப் பரப்பு உடனே தானம் செய்யப்பட்டது. இரண்டாம் விக்ரமணத்தில் ஒரு திருவடி ஆகாயத்தில் அண்டமுற ஓங்கிற்று. ஆசார்ய தண்டி கவி, அத்திருவடியை '[illegible]' என்று வர்ணித்தார்.*

---

வாமனன் இரந்த மூவடி மண்ணை வள்ளல் மாவலி தாரை வார்த்துக் கொடுத்ததும், இரப்பு வாய்ந்த ப்ரீதியால் வாமனன் பேருருக் கொண்டதைக் கம்பர்,

"கயந்தரு நறும்புனல் கையில் தீண்டலும்
பயந்தவர் களுமிகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினன்
உயர்ந்தவர்க் குதவிய உதவி ஒப்பவே."

[இதன் பொருள்] 'குளத்திலுள்ள நல்ல (மாவலி தாரை வார்த்துக் கொடுத்த) நீரானது தனது கையிற் பட்ட மாத்ரத்திலே, பெற்றவர்களும் இகழ்தற்குரிய குள்ள வடிவமுள்ள வாமன மூர்த்தி, (எல்லாரும் தனது பேருருவத்தை) எதிரிலே யிருந்து நோக்கி ஆச்சரியப்பட்டு அச்சம் கொள்ளும்படி, (நற்குண நற்செய்கைகளாற்) சிறந்தவர்களுக்குச் செய்த தானத்தின் பலன் போல ஆகாயத்திலே உயர்ந்து வளர்ந்தான்' என்றார்.

[குறிப்பு] கொடுத்தது மஹாபலி; ஏற்றது வாமனன்; கொடுக்கப்பட்ட பொருளோ மூவடி மண்; அது மிகவும் சிறியது. "அறப்பயனும், தான் சிறிதாயினும் தக்கார்க் கைப் பட்டக்கால், வான் பெரிதாப் போர்த்துவிடும்" எனும் அறநூல் இலக்கணப்படி அவ்வுதவிப் பயனே வானினும் பெரிதாகி, எம்பெருமானின் சால்புபோல் மூவுலகையும் அவர்க்கு ஆக்கிப் பரவிற்று. [கோ. ஸு.]

அத்திருவடிச் சாயையில் ஒரு குடை நிழலில் இருப்பது போல ஜகத் இருக்கிற தென்று ரஸம். 'த்ரிவிக்ரம பகவானுடைய திருவடி ஶாகையான நக ரத்ந சந்த்ரிகையால் மனத்தின் தாபங்களெல்லாம் அடங்கிக் குளிர்ந்திருக்கையில் தாபத்துக்கு இடமேது? சந்த்ரன் உதித்து ப்ராகாஶிக்கையில் வெயில் வெப்பத் துக்கு இடமேது?' என்று பாகவதம் (11-2-54)

" யஸ்யாமலம் திவியஶ: ப்ரதிதம் ரஸாயாம்
பூமௌ ச தே புவநமங்கல திக்விதாநம் ।
மந்தாகிநீதி திவி போகவதீதி சாதோ
கங்கேதி சேஹ சரணாம்பு புநாதி விஶ்வம் ॥ "

என்று ஸ்ரீ பாகவதம் 70-வது அத்யாயத்தில், நாரதர் பகவானைப் புகழ்கையில், [பகவானுடைய சுத்த வெண்கீர்த்தி தேவலோகத்தில் மந்தாகிநி என்றும், ரஸாதலத்தில் போகவதி யென்றும், பூமியில் கங்கை யென்றும் பெயர் வஹித்து, ஆகாயம் திக்கு முதலியவைகளில் எல்லாம் ஓர் வெண் மேலாப்பு விரித்தது போல ப்ரவஹித்துள்ளது.] என்று வர்ணித்தது இங்கே ஸ்வாமி திருவுள்ளத் தில் உள்ளது. கங்கை பகவானுடைய யஶஸ்ஸைத் திஶாந்தங்களில் பரவச் செய்ததாக நாரதர் ஸ்தோத்ரம்.

" ஸ்வயம் த்ரிவிக்ரமத்ரிவிக்ரமநவசி வா வததீ நிராஷிக
லோகத்ரயம் பகவதோ விஶதேவ கீர்த்தி: । "

என்று சுகரும் [ஆகாயத்திலிருந்து விழும் பகவத் பாத கங்கை பகவானுடைய சுத்த வெண் கீர்த்திப் பரப்பாக மூவுலகங்களினும் பரவி சுத்தப்படுத்துவது போல் உள்ளது] என்று பாடினர். குருவான சுக்ராசார்யர், 'விஷ்ணுவே வாமந வேஷத்துடன் வந்து ஏமாற்றி உலகத்தைப் பிக்ஷை ஏற்பதுபோல் ஏற்றுப் பிடுங்கிக்கொள்ள வந்தார்' என்று எச்சரித்தும், அவர் கட்டளையை மீறி அவர் ஶபித்ததையும் லக்ஷ்யம் செய்யாமல், தன் பத்நி விந்த்யாவளி பொற் கல சத்தில் தீர்த்தம் வார்க்கத் தான் வாமநர் திருவடிகளைச் சோதித்துத் தன் ஶிரஸ் ஸில் அவர் ஸ்ரீ பாத தீர்த்தங்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, அவனுக்கு விரோதிகளான தேவ கணங்க ளெல்லாம் வாத்யங்களை முழங்கி, அவனுடைய ஆர்ஜவத்தை மெச்சிப் புஷ்ப வர்ஷம் வர்ஷித்தார்கள். மற்றும் :

' உந்வநாடநேந க்ருதம் ஸுதுஷ்கரம்
விஜ்ஞாய தாஸ்யந்த்ரிவனோ ஜகத்த்ரயம் । '

[இம்மஹா மநஸ்வி மிக்க அரிய செயல் புரிந்தார். நன்ருய் உண்மை யைத் தெரிந்து கொண்ட பின்பும் உலகம் மூன்றையும் ஶத்ருவுக்குக் கொடை யாக கொடுத்தான்] என்று புகழ்ந்தார்கள். குரு இவரைப் பயமுறுத்தியும் சபித்தும் இவர் ஸத்யத்தை விடாமல் உறுதியாய்ப் பற்றினர். 'நான் வஞ்சனை

வார்த்தைகளைப் பேசி யாசித்தும், இவர் ஸத்ய வாக்காகவே யிருந்து தர்மத்தை விடாமலிருந்தார். தேவர்களுக்கெல்லாம் கிடைக்காத உயர்த்நியை இவர்க்கு அளிப்பேன். இவர் ஸாவர்ணியின் அந்தரத்தில் இந்த்ர பதவியில் விளங்குவார். அதுவரையிலும் இவர் ஸுதலத்தில் ஸுதர்ஶநரும் நானும் காவல் புரிய, என்னைப் பார்த்துக்கொண்டே மகிழ்வடைந்திருக்கட்டும்' என்று பகவான் மகிழ்ந்து புகழ்ந்து அநுக்ரஹித்தார். ஓங்கி உயர்ந்த திருவடியிலிருந்து மூவுலகங்களிலும் வெண்மையான ஜலங்களோடு ப்ரவஹித்த புநித கங்கை, 'பலியினுடைய யஶஸ்ஸின் பரப்பு' என்று இங்கே ஸ்வாமியின் உல்லேகம். உதாரரும் அஜிதருமான பகவான் அஸுர பலியினுடைய உதார குணத்துக்குத் தோற்ருர். அவனுடைய ஸேனையின் முன்னே, கொடி தூக்கிச் செல்லும் காலாள் படன் போல் தன்னை நினைத்துக்கொண்டு அதிவேகமாக அவன் உதார யஶஸ்ஸைத் தானே மூவுலகிலும் எல்லாத் திக்குக்களிலும் பரவச் செய்தாரென்று பகவானுடைய கல்யாண குணத்தை இங்கே நிரூபித்தார். விரோதியான பலியின் குணத்துக்குத் தோற்று அவன் யஶஸ்ஸைத் தாமே அவன் கொடி தூக்கும் ஆள்போல் பரப்புவது பகவானுடைய யஶஸ்ஸையுமே அத்புதமாகப் பரப்புகிறது. ஆகையால் பகவானுடைய யஶஸ்ஸின் பரப்பாக மேலிருந்து விழும் கங்கையைப் பாகவதத்தில் சுகரும் நாரதரும் வர்ணித்ததற்கும், ஸ்வாமி இங்கே அதையே பலியின் யஶஸ்ஸின் பரப்பாக வர்ணிப்பதற்கும் விரோதமில்லை. பகவான் பலியைப் புகழ்ந்து பேசினதையும், இந்த்ரனுக்குக் கிடைக்காத பாக்யங்களைப் பலிக்குத் தாமாகவே அநுக்ரஹித்ததையும் கொண்டு, ஸ்வாமி பகவத் புத்தியால், 'திருவடியிலிருந்து கங்கையின் பெருக்கு மஹாபலியின் யஶஸ்ஸின் பரப்பே' என்று நினைத்ததாக நிரூபிக்கிருர். முன் ச் லோகத்தில், ப்ரஹ்மாக்களுக்கு ந்ருஸிம்ஹன் அவதாரத் தூண் பாட்டியாயிற்று என்றதால், ப்ரஹ்மா புத்ர னென்பதை ஸூசித்தார். இங்கே த்ரிணேத்ரர், தமது மூன்று நேத்ரங்களையும் மகிழ்ச்சியுடன் செலுத்தித் தம் ஶிரஸ்ஸில் 'ஶிவ: ஶிவோஹ-ஙு' என்று சுகர் பாடியபடி, கங்கையைத் தரித்துப் பரிசுத்தமானதை இங்கே 'த்ரைநயநம் உகடிபம் வ-ந்நு' என்றும் காட்டுகிருர்.

ஸுமதி—இப்படியே உமக்கு ஜயம் வந்து உம்முடைய யஶஸ்ஸும் கங்கையைப்போல் மூவுலகங்களிலும் எல்லாத் திக்குக்களிலும் பரவவேணும்.

[தொடரும்.]

𑌶𑍍𑌰𑍀 𑌗𑍋𑌦𑌾𑌯𑍈 𑌨𑌮𑌃

# ஸ்ரீ ஆண்டாள் அஷ்டோத்தரம்

## ('தையொரு திங்கள்' பாமாலையிலிருந்து தொகுக்கப்பெற்றது.)

[ஸ்ரீ. உ.வே. தி. ராமஸ்வாமி ஐயங்கார், B.A., B.L., அட்வோகேட், சென்னை.]

மார்கழித் திங்கள் ஒன்றுதான் ஆண்டாளுக்கான மாதம் என்பது பலர் நினைவு. அது திருப்பாவை அநுபவத்தின் பெருமையால் வருவது. ஆண்டாளுடைய அடுத்த நூல் நாச்சியார் திருமொழி. அது 143 பாசுரங்கள் கொண்டது. 'தையொரு திங்களும் தரை விளக்கித் தண்மண்டல மிட்டு மாசி முன்னாள்' என்பது அதன் ஆரம்பப் பாசுரம். அந்த ப்ரபந்தத்தின் இரண்டாவது திருமொழியின் முதல் பாசுரத்தில் '.........காமன் போதரு கால மென்று பங்குனி நாள் கடைபாரித்தோம்' என்பது. ஆகவே, இந்த நாச்சியார் அவதரித்த மாதமான ஆடி மாதத்துடன், மார்கழி, தை, மாசி, பங்குனி என்ற நான்கு மாதங்களுங்கூட ஆண்டாள் பாசுரம் பெற்ற மாதங்கள். நாச்சியார் திருமொழியென்னும் ப்ரபந்தத்திற்குத் 'தையொரு திங்கட் பாமாலை' என்றே நாமகரணமிட்டிருக்கிறார் நம் தேசிகர் பெருமான். அந்தப் பாமாலையில் திகழக்கிடக்கும் எம்பெருமானுடைய திருநாமங்களைத் தொகுத்து ஒரு அஷ்டோத்தரமாகப் புனைந்து அவனுக்கே ஸமர்ப்பிக்கவேண்டு மெனும் ஆசை தூண்ட, இச்சிறு பணி இப்போது இச் சிறியேனால் மேற்கொள்ளப்படுகிறது.

'உன்தன்னைச் சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே' என்று திருப்பாவையில் அபசார க்ஷமாபணம் வேண்டிய கோதை, மேல் ப்ரபந்தத்தில் எப்பெயர்களை இட்டு அவனைப் பேசுகிறாள் என்பதை நன்றாக நோக்க வேண்டும். நோக்குங்கால் அவள் உள்ளத்தில் ஓடும் அடங்காக் காதல் ஒரு படியாக நமக்குப் புலப்படும். இந்த விலக்ஷண அஷ்டோத்தர ஶத நாமாவளிகள் பின் வருமாறு:—

1 கருவுடை முகில் வண்ணன்
2 காயா வண்ணன்
3 கருவிளைபோல் வண்ணன்
4 தீமைசெய்யும் சிரீதரன்
5 குண்டுநீருறை கோளரி
6 மதயானை கோள் விடுத்தான்
7 தெண்டிரைக் கடற் பள்ளியான்
8 பெய்யுமா முகில்போல் வண்ணன்
9 செய்ய தாமரைக் கண்ணினன்
10 இலங்கையைப் பூசலாக்கிய சேவகன்
11 ஓதமா கடல் வண்ணன்
12 சேதுபந்தம் திருத்தினான்
13 சுடர்சக்கரம் கையி லேந்தினான்
14 சீதை வாயமுத முண்டான்
15 அரவணைமேல் பள்ளிகொண்டான்
16 மதுவின் துழாய் முடிமால்
17 குதிகொண் டரவில் நடித்தான்
18 இரக்கமே லொன்று மிலாதான்
19 இலங்கை யழித்த பிரான்
20 கோலங் கரிய பிரான்
21 குடங்களெடுத் தேறவிட்டுக் கூத்தாட வல்ல வெங்கோ
22 நீதியல்லாதன செய்தான்
23 ஊழியெல்லா முணர்வான்

24 கோமளவாயர் கொழுந்து
25 மசி மையிலி
26 கன்று மேய்த்து விளையாடுங்
கோவலன்
27 வெள்ளை விளிசங்கிடங் கையில்
கொண்ட விமலன்
28 பொன்புரைமேனிக் கருளக்
கொடியுடைப் புண்ணியன்
29 சார்ங்கம் வளைய வலிக்கும்
தடக்கைச் சதுரன்
30 பைங்கிளி வண்ணன்
31 சங்கொடு சக்கரத்தான்
32 விண்ணுற நீண்டடி தாவிய
மைந்தன்
33 கோவிந்த னென்பானோர் காளை
34 பூப்புனைக் கண்ணிப் புனிதன்
35 மதுரையார் மன்னன்
36 மைத்துனன் நம்பி
37 காய்சின மாகளி றன்னான்
38 நம்மை யுடையவன்
39 அரிமுக னச்சுதன்
40 மருப் பொசித்த மாதவன்
41 நின்ற புணர் மருதம்
சாபம் தீர்த்தான்
42 செங்கண் கருமேனி வாசுதேவன்
43 என்னை நலங்கொண்ட நாரணன்
44 சுந்தரத் தோளுடையான்
45 ஏறு திருவுடையான்
46 மாலிருஞ்சோலை நின்ற சுந்தரன்
47 கொல்லை யரக்கியை
மூக்கரிந்திட்ட குமரனார்
48 ஆடுங் கருளக் கொடியான்
49 பணமா டரவணைப் பற்பல
காலமும் பள்ளிகொள்
மணவாளன்
50 குடமாடு கூத்தன்
51 கோமிறை செய்தெம்மை
உடைமாடு கொண்டான்
52 அழகப் பிரானார்
53 உடலுள் புகுந்து நின்று
ஊறா லறுக்கின்ற மாயன்
54 நாகணைமிசை நம்பரர்
55 செல்வர்
56 பெரியர்
57 தீமுகத்து நாகணைமேல் சேரும்
திருவரங்கர்
58 என்னரங்கத் தின்னமுதர்
59 குழலழகர்
60 வாயழகர்
61 கண்ணழகர்
62 கொப்பூழில் எழுகமலப் பூவழகர்
63 எம்மானார்
64 செங்கோலுடைய திருவரங்கச்
செல்வனார்
65 பச்சைப்பசுந் தேவர்
66 நான்மறையின்
சொற்பொருளாய் நின்றார்
67 மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர்
68 பெண்ணாளன்
69 மாதவ னென்பதோ ரன்பு
70 பெற்றிருந்தாளை யொழியவே
போய்ப் பேர்த்தொரு தாயில்
வளர்ந்த நம்பி
71 மாணியுருவாய் உலகளந்த மாயன்
72 குறும்பு செய்வான்
73 கண்ண னென்னும் கருந்தெய்வம்
74 பெண்ணின் வருத்த மறியாத
பெருமான்
75 பாலாலிலையில் துயில் கொண்ட
பரமன்
76 கஞ்சைக் காய்த்த கருவில்லி
77 அஞ்சேலென்னு ளவனொருவன்
78 ஆயர்பாடி கவர்ந்துண்ணும்
காரேறு
79 ஆராவமுத மனையான்
80 அழிலும் தொழிலு
முருக்காட்டான்
81 கொடிய கடிய திருமால்
82 போட்கன்
83 வெற்றிக் கருளக் கொடியான்
84 கொள்ளை கொள்ளிக் குறும்பன்
85 கோவர்த்தனன்
86 அல்லல் விளைத்த பெருமான்
87 ஆயர்பாடிக் கணிவிளக்கு
88 பலதேவர்க்கோர் கீழ்க்கன்று
89 குணுங்குநாறிக் குட்டேறு

90 மாலாய்ப் பிறந்த நம்பி
91 மாலே செய்யும் மணாளன்
92 ஏலாப் பொய்க ளுரைப்பான்
93 ஏது மொன்றுங் கொளத் தாரா ஈசன்
94 வீதியார வருவான்
95 தரும மறியாக் குறும்பன்
96 பொருத்த மிலி
97 விரியுங் கதிரே போல்வான்
98 பொருத்தமுடைய நம்பி
99 புறம்போ லுள்ளும் கரியன்
100 விருத்தம் பெரிதாய் வருவான்
101 வெளிய சங்கொன் றுடையான்
102 பீதகவாடை யுடையான்
103 அளிநன்குடைய திருமால்
104 ஆழியான்
105 வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன்
106 வேட்டையாடி வருவான்
107 பருந்தாள் களிற்றுக் கருள்செய்த பரமன்
108 பெருந்தாளுடைய பிரான்

ஸஹஸ்ர நாமத்தை அருளிச்செய்த ஸ்ரீ பீஷ்மாசார்யர், ‘யாநி நாமாநி கௌணாநி’ யென்று கூறிய குணங்களை யிட்டு ஏற்பட்டது அவ்வாயிரமும் என்பதை விளக்கினர். ஆனல் நம் ஆண்டாள் இட்ட திருநாமங்கள் எம்பெருமானுடைய குணங்களைமட்டும் பாராட்டுவதோடு நில்லாமல், அவனுடைய அகுணங்களையும் [குணங்க ளாகாதவைகளையும்] பாராட்டுவனவாகக் காண்கின்றன. ‘ஶாஶ்வத ஸ்ஸஹவாஸ குணை:’ என்று வால்மீகியும், ‘கல்யாண குணை ஸமஸ்த ஸந்தோஹ:’ என்று பராஶர பாராஶர்யர்களும், ‘குணைர் ஸர்வ குண ஸம்பந்ந:’ என்று பீஷ்மாசார்யரும் கொண்டாடும் பெருமாளைக் குறித்துக் கோதைப் பிராட்டி, ‘தரும மறியாக் குறும்பன்’ என்று பேசுகிருள். ‘ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஹ்ருஷீகேஶ’ என்று ஶபதம் செய்தவனை ‘அஞ்சேலென்ற னவனொருவன்’ என்று நிர்த்தேஶிக்கிருள். ரக்ஷிப்பது அவனது இயல்பு என்பது மாறி, ரக்ஷிக்காமை யொன்றே அவனுக்கு அடையாள மாகிறது. ‘நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீண்மறைகள்?’ என்று கம்பன் பாசுரமிட்டு வியந்தவனைக் குறித்து, ‘நீதியல்லாதன செய்தான்’ என்று ஆண்டாள் வர்ணிக்கிருள்.

இப்படியே இன்னும் பல நாமங்கள் ஆண்டாள் இட்டிருப்பவை அதிவிலக்ஷணங்களாக சிந்தையில் பர்யவஸிப்பவை. ஆலோசிக்கப்புக்கால், ஆண்டாளைப்போல் எம்பெருமானைத் தூற்றிப் போற்றிய பேர்கள் வேறொருவரும் இலரென்றே சொல்லலாம். ‘வேல்வேந்தர் கூட்டகத்தும் நாட்டகத்தும் தன்னிலைமை யெல்லாம் அறிவிப்பன்’ என்று மருட்டிய மங்கை மன்னனும், ‘ஏலாப் பொய்க ளுரைப்பான்’ என்ருவது, ‘புறம்போல் உள்ளும் கரியான்’ என்ருவது பேர்பாடக் கற்றிலர். ‘உலகுதோ றலர் தூற்ற’ முற்பட்ட நம்மாழ்வாரும் ‘கடியன் கொடியன் பெருங் கிறியன்’ என்றுதான் பேச மாட்டுவர். ‘மசிமையிலீ!’ [வெட்கங் கெட்டவனே!] என்று கூப்பிட ஆண்டாள் தான் துணிந்தாள். போட்கன்] பொய்யன், சுணைகேடன்] என்று வ்யவஹரிக்க அவள் ஒருவளே அதிகாரி. பொதுவாக ஆழ்வார்களெல்லாம் எம்பெருமானுடைய உயர்வற உயர்நல முடைமையைப் பாராட்டிப் பேசியிருக்கிருர்கள். ‘வல்வினையேனை யீர்கின்ற குணங்கள்’ என்பது அவர்கள் அநுஸந்தாநம். ஆண்டாளோ முக்யமாகப் பெருமாளுடைய அகுணங்களில் ஈடுபட்டு நிற்கின்ருள். ‘ஶ்ருத்வா குணாந்’ என்று எழுதிய ஸ்ரீ ருக்மிணிப் பிராட்டியின்

வாக்யத்தை ‘ஶ்ரு-ஷ்வா, ஸம-ணாய’ என்று பதச் சேதம் செய்து காட்டுகிறாள் ஸ்ரீ கோதைப் பிராட்டி. ஆழ்வார்களில் விலக்ஷணமான ஆண்டாளுடைய இப்பெருமையைக் கொண்டே அவன் பட்டபாடு அவர்கள் ஒருவரும் படவில்லை யென்பது கொள்ளலாம். உண்மையில் அவள்தான் எம்பெருமானுக்குப் பட்ட மஹிஷி பட்டம் பெற்றாள். ‘ஆருயிர் பட்டது எனதுயிர் பட்டது’ என்பது பராங்குஶ நாயகியினும் வில்லிபுதுவை நாயகிக்கே மிகவும் பொருந்தும்.

ஆழ்வார்களை அதிஶயித்த ஆண்டாளுடைய நிந்தனை முறைகளைச் சொன்னோம். சிற்சில இடங்களில் ஆழ்வார்களைத் திருத்தி வசையிட்டிருக்கும்படிகளையும் நாம் அநுபவிக்க வேண்டும்.

‘கடியன் கொடியன் நெடியமால்’ என்பது நம்மாழ்வார் அருளிச் செயல். நெடியமால் கடியனாகவும் கொடியனாகவும் இருப்பதில் வியப்பில்லை. இதை உணர்ந்தே அவ்வாழ்வார் திருவிருத்தத்தில் ‘திருமால் கொடியானென்று வார்கின்றதே’ என்று பாடியுள்ளார். ஆண்டாள் பார்த்தாள். அஜ்ஞாத நிக்ரஹையான [தண்டிக்கவே தெரியாத] பிராட்டியுடன் நித்ய யோகம் பற்றும், இவர் கொடியவராயிருப்ப தொன்றே என்று சொன்னால்தான் அவர் உள்ளத்தில் நன்குபடும் என்ற கருத்தால் ‘கொடிய கடிய திருமால்’ என்று பாடியிருக்கிறாள். அப்படியே தகப்பனார் பெருமாளுக்குத் திருத்தாயார் மனோநிலையை ஏறிட்டுக்கொண்டு, ‘நாணித்தனையு மிலாதாய்!’ என்று எம்பெருமானை விளித்திருக்க, ‘மசிமையிலீ கூறை தாராய்’ என்று யுவதிகள் வாயிலிட்டு அவனை லஜ்ஜை கெட்டவனென்று பேசுவிக்கிறாள். குழந்தைகள் நாணங் கெட்டிருப்பதிலும், வயது வந்த ஒரு யுவதி முறை தப்பி நடப்பது எத்தனை அடாத காரியம்! அது உள்ளத்தில் உறுத்தட்டு மென்றே இப்பதத்தையும், இதேமாதிரி, ‘போட்கன், பெண்ணின் வருத்த மறியாத பெருமான், கொள்ளை கொள்ளிக் குறும்பன்’ இத்யாதி நாமாக்களையும் ஶரமாரியாகப் பொழிந்திருக்கிறாள்.

[பத்தியில்லாத நம் பாவி நெஞ்சால் நாம் இம்மொழிகளைச் சிந்தித்தலும் பாவம்; அபசாரம். ஆண்டாளுக்குள்ள அடங்காக் காதலும் ப்ரேமையும் நமக்கு எம்பெருமானிடத்து ஏற்பட்டவன்றே நாம் இச் சொற்களைக் கையாள உரிமையுள்ளவர்கள் என்பதை நாம் மறக்கலாகாது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# மதுராலாபம்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், M. A., வித்வான். L. T., திருவையாறு.]

மார்கழி பிறந்த தென்றல், மாதவனின் அன்பே உருவெடுத்து உருகிப் பெருவெள்ள மிட்டு ஓடிய ஓர் மாதரசியை நாம் மறக்கப்போமோ? அது ஓர் அதிசயப் பிறவி ஆநந்தமான கற்பனை. இன்ப வாரிதி. எழிலின் வெள்ளம். அப்பெண்மணியின் வாழ்க்கையைத்தான் சொல்லுகிறேன். தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யவும் நீங்காத செல்வம் நிறையவுமே நம்மிடைத் தோன்றிய இத்தெய்வ நங்கையின் அற்புதம் யாது?

கடவுளை—காண்டற்கரிய கார்முகிலை—காசினியின் களைகணைத் தேடியவர்கள் பலர். மஹர்ஷிகள் தேடினார்கள்; கண்டார்கள். மற்றும் பல மாதவர்கள் தம்தம் வழி சென்று கண்டனர். ஆழ்வார்கள் ஓடிவிழுந்து உகந்து ஆலித்து உத்தமனை அடைந்தனர். தேசாந்தரங்களிலும் ஸென்ட் ஆகஸடின் ஸெண்ட் ப்ரான்ஸிஸ், ஸென்ட் ஆக்னஸ் முதலியோர் இறைவனை உணர்ந்து களித்தனர். ஆண்டாள் கண்ட வழியோ—அம்மம்ம! அற்புதத்திலும் அற்புதம்!

கடவுளுக்குக் காணிக்கையாகப் பூவைக் கொடுப்பார், புனலைத் தருவார், புகை யெழுப்புவார். கண்டதுண்டு; கேட்டது முண்டு. ஆனால் எழும்போதே நறுமணத்துடன் இறைவனது உத்யாநத்தில் எழும் மலர்போல் தன்னையே தாமோதரனுக்கு அளித்துக்கொண்ட தையல் நாயகம் ஆண்டாளையன்றி ஆரைக் கண்டோம்? இவ்வநிதாமணியின் வாழ்க்கையோ ஓர் இன்பக் கனவு. கற்பனைக் களஞ்சியம். வாடாத மலர்மாலை. குன்றாத மெல்லொளி. குறையாத கருவூலம். மாசூணா மரகதம். கார்வானத்து மின்னல்போல் இவ்விருள்தருமா ஞாலத்தி லெழுந்த இக்கற்பகக் கொடி, தன் வாழ்நாளாலே வண்மையாம் ஓர் சொற்பொழிவு செய்தார். வாய்திறந்து பேசியது இருக்கட்டும். 'மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்' என்ற கூச்சலினால் நாம் இறைவனின் ஸொத்தென்றும், இறைவன் நம் ஸ்வாமி என்றும், நாம் அவனை அவனுடைய கருணை மூலமாக அடைந்து அவனுடைய கோபத்தை மாற்றி நிச்சயமாய்த் தொண்டு செய்யும் இன்பக் கடலில் மூழ்கவேண்டு மென்றும், இவ்வித அர்த்த பஞ்சகத்தை வெளியிட்டா ரல்லவா?

இவரது காதலுக்கு மண்ணும் விண்ணும் நிகரல்ல. இறைவனை நேசித்தவர்கள் பலர். அவனுடைய குணத்தைப் பாடியவர் பலர். அவன் புகழைப் பாடி ஆடியவர் பலர். ஆனால் அவன்பால் பரிவுற்று ஸர்வ சக்தனை அவனுக்கு இடர் வாராதிருக்கவேண்டுமே என்ற மனத் துடிப்புக் கொண்டவர் இருவரே. இவர்க்கு நிகர் இவரே. யார்? பல்லாண்டு பாடிய பிதாவும், அவன் தனிமைக்குப் பரிவுற்று ஏங்கிய புத்ரி ஆண்டாளுமே.

ஸர்வ சக்தனாய் நிகில ஜகதாதாரனாய் அமராஸுர வந்த்யனாய், ப்ரம்ஹாதி ஸ்தாவர பர்யந்த ஸமஸ்த சேதநாசேதந நியந்தாவாய், ஸங்கல்ப லேஶத்தால் செய்யப் பெற்ற ஸ்ருஷ்டி ஸ்திதி லய ரூபமான செயல்களை உடையவனான ஸ்ரீ வடபெருங் கோயிலுடையானுக்கு யார் என்ன தீங்கு செய்துவிடுவார்களோ என்று இம்மாதரசி நடுங்கினாளாம். என்ன இனிய லோகோபகாரமான பரஹ்ருதயத்தைக் கனிவிக்கவல்ல அறியாமை! இரவில் குழந்தை ஆண்டாள் எழுந்தாளாம். வானில் கரிய மேகப்படலம் நிலவி ஓர் விரிப்பு விரித்தது போல் இருந்தது. பளீர் பளீர் என்று மின்னல் கண்ணைப் பறித்தது. அடிவானத்தில் ராஜாதிராஜர்களின் அணி முற்றத்தில் அடிக்கப் பெறும் முரசு போல் இடி முழக்கம் கேட்டது. இதைக் கேட்டுப் பொருது எழுந்த ம்ருகேந்த்ரன் காட்டில் எழுப்பிய எதிரொலி பன்மடங்கு விரிந்து கேட்கப் பெற்றது. இயற்கையில் எல்லாப் பொருள்களும் எம்பெருமானுக்கு ஏதோ இடர் விளைப்பதுபோல் தோன்றிற்றும். வான் கறுத்தது. வையகம் இருண்டது. மின் மிளிர்ந்தது. மேகம் உறுமியது. ம்ருகேந்திரன் கர்ஜித்தது. 'ஐயோ! மாதவனுக்கு என்ன இடர் வருமோ!' என்று ஏழை ஆண்டாளின் உள்ளம் இளகியது. கேவிக் கேவி அழுதாள்; எழுந்தாள். கோவிலை நோக்கி ஓடினாள். பூமிக்கும் ஸ்வர்க்கத்திற்கும் இடையில் ஏணிபோல் நின்றதும், தன் தந்தையாலே எழுப்பப் பெற்றதுமான வானளாவிய கோபுரத்தைப் பார்த்தாள். தன் கண்ணீர்களைத் துடைத்துக்கொண்டாள். அதி விஸ்மிதத்துடன் அதை நோக்கினாள். கை குவித்தாள். மண்ணில் படிந்து நமஸ்கரித்தாள். உள்ளே நுழைந்தாள். இருண்டு கிடந்தது. 'ஐயோ! எந்தையே! வெளிச்சமே இல்லையே!' என்றாள். 'பாம்பு புலி உள்ளே நுழைந்தால் உன்னைக் காப்பார் யார்?' என்று நினைத்தாள். உள்ளெலாம் உருகி அழ ஆரம்பித்தாள். நான்கு கட்டுகளும் நுழைந்து மஹாமண்டபத்தின் வாயிலைக் குறுகினாள். கதவு தாளிட்டிருந்தது. உள்ளே ஒரு த்வாரத்தின் வழி நோக்கினாள். மங்கலான வெளிச்சம். குளிர்ந்த காற்று விர்ரென்று வீசியது. படபடவென்று ஒரு பேரிடி இடித்தது. ஆண்டாள் கண்ணை மூடிக்கொண்டு தாளிட்ட கதவில் சாய்ந்து குலுங்கக் குலுங்க அழுதாள். ஏன்? பயத்தினாலா? ஆமாம்; இடி தன்னை ஏதேனும் செய்யுமென்றோ? இல்லை. மாதவனைத் துன்புறுத்துமென்றோ? ஆமாம்; ஆமாம்.

நடுநிசி. எங்கும் நிச்சப்தம். ஆண்டாள் தன் செந்தாமரைக் கையால் சீரார் வளை யொலிப்பக் கதவை மெதுவாகத் தட்டினாள். 'கண்ணா! கண்ணா!' அவள் கண்களில் வெட்கம் தோன்றியது. அவளது இருண்ட அளகங்கள் அவளது செந்தாமரை முகத்தின் சோபையைப் பன் மடங்கு எடுத்துக் காட்டியது. மின்னிய மின்னல் வெளிச்சத்தில் விளங்கிற்று. 'கண்ணா! தனியாயிருக்கிறாயே!' இந்த சப்தம் மண்டபங்கள் மாளிகைகள் சூளிகைகள் தோரணங்கள் எல்லாவற்றிலும் மோதி ஓர் இன்பமயமான கல்லோலமாயெழுந்து, மரம் செடி கொடி மாடம் எல்லாவற்றிலும் ப்ரதித்வனித்தது. மறுபடியும் 'கண்ணா! நீ தனியாயிருக்கிறாயே! கதவைத் திற' எனும் சப்தம். பதிலில்லை. ஒரே நிச்சப்தம். மனத்தை மருட்டும் நிச்சப்தம். 'கண்ணா!

நான் உனக்குத் துணைவருகிறேன்; உள்ளே விடு.' கோபுரத்தில் பலமாகக் கிளை கூட்டிய ஆந்தைகளின் பேரிரைச்சல் கேட்டது. ஏக காலத்தில் ஆயிரம் வீணைகள் சேர்ந்து இன்ப இசை எழுப்புவதுபோல் 'கண்ணு! என் கண்ணின் மணியே! நீ தனிமை யுற்றுயே! கதவைத் திற' பதிலில்லை. குழந்தை ஆண்டாள் கோபத்தை அபிநயித்தாள். 'உன்னை வெளியே பூட்டி விடுவேன். இதோ வெளித் தாளைப் போட்டுவிடுவேன்; திற; என் கண்ணல்லவா?' மறுபடியும் பதிலில்லை. வெகு தூரத்திலிருந்த மண்டூக நதியின் கரையில் பொருது நின்ற சிங்கங்களின் கர்ஜனை ஒலியைச் சந்தனக் காட்டிலிருந்து வீசும் ஜில்வென்ற பனி வாடை பெருக்கிக் காட்டிக் கோவிலெங்கும் எதிரொலி கிளப்பியது. நாசிங்கத்தைச் சிங்கம் விழுங்கிவிடுமோ என்று அஞ்சிய ஆண்டாள் தன் மேலாடையை மெல்லிய இடையில் இறுகக் கட்டி அதிரும் வளையார்ந்த தன் கையினுல் சைகை செய்து, 'சிங்கம் வரட்டும்; ஒரே அடி அதன் முகத்தில் கொடுக்கிறேன்' என்று புலம்பினுள். ஒரே தெய்வீக முகத்தில் துயரம், கோபம், பிணக்கு, களிப்பு, தேறுதல், கெஞ்சல், கொஞ்சல் எல்லாம் காணப்பட்டன.

முஹூர்த்தங்க ளாயின. துயரத்தால் மூர்ச்சை யுற்ற குழந்தை ஆண்டாள் இறைவனது தோரண வாயிலில் மூர்ச்சித்துக் கிடந்தாள். கண்களில் முத்து முத்தாகக் கண்ணீர் தேங்கியிருந்தது. அளகங்கள் சுருள் சுருளாய் அவளது அழகிய வதனத்தில் தவழ்ந்தன. கீழ்வானம் வெள்ளென் றுயிற்று. கோயிலில் இருள் சிறிது சிறிதாய்ப் புலர்ந்தது. கோபுர வாயிலில் பெருவீதியில் பாரமேற்றப்பட்டுப் பிற நாடுகளுக்குச் செல்லும் வண்டிகளின் உருளுஞ் சகட ஒலி கேட்டது. பக்ஷி ஜாலங்களின் சலசலப்பு ஒலி செவிகளில் புகுந்தது. உடனே அரி யென்ற பேரரவம் கேட்டது. பெரியாழ்வார் குழந்தையைக் காணுது எங்கும் தேடி, ஏதும் செயலற்று, வருந்திய நிலையில் இறைவனை வலம் வர வந்தார். வாயிலில் துவண்ட கொடிபோல் இருந்த அப்பெண்மணியைக் கண்டார். உளம் உடைந்தார். ஓடினர். குழந்தையை வாரி அணைத்தார். மூச்சு இருப்பதைக் கண்டார். உச்சி மோந்தார். அணைத்து முத்த மிட்டார். 'பரந்த உலகில் பரந்தாமனின் காலடியோ உனக்கு இடம்' என்றுர். இந்தக் குளிரிலும் இந்தக் காற்றிலும் இந்தப் பயங்கர இரவில் 'என் கண்ணே! கற்பகமே!' என்று ஆண்டாள் மீது பாஷ்பமாரி பொழிந்தார்.

'தாயே! நீ ஏன் இங்கு வந்தாய்?' என்று ஆழ்வார் கேட்டார். குவளை மலர் போன்ற தன் கண்களைத் திறந்த ஆண்டாள் சற்று வெட்கமுற்று, 'தந்தாய்! தாமோதரனுக்கு யார் துணை? தன்னந்தனியாக உள்ளே கிடக்கிருன். மலைக்காற்று ஜில்வென்று வீசுகிறது. இடி இடிக்கிறது. சிங்கம் கர்ஜிக்கிறது. மலையருவிகள் 'ஹோ' வென்று கறங்குகின்றன. என் அப்பன் பயந்தால் அவனுக்கு யார் துணை?' என்று கண்ணைப் பிசைந்து ஓவென்று அழுதாள்.

தூசி படிந்த குழலும் ஆடையும் பொன் மேனியையுங் கண்ட ஆழ்வார் கலங்கினார். உள்ளெழுந்த விக்கலை அடக்கிக் கொண்டார். "தாம் நீலகேசீம் பிம்போஷ்டீம் ஸுமத்யாம் ஸுப்ரதிஷ்டிதாம்। ஸீதாம் பத்மபலாசாக்ஷீம் மந்மதஸ்ய ரதிம் யதா ॥ நிச்வாஸபஹுளாம் பீரூம் புஜகேந்த்ரவதூமிவ। ஸம்வீதாம் தூமஜாலேந சிகாமிவ விபாவஸோ:॥" என்ற ராமாயண ச்லோகங்கள் நினைவிற்கு வந்தன. 'அவனுக்குத் துணை நீயே' என்று ஆண்டாளைக் கையிலேந்தி ஆறுதல் கூறி, 'ஸா ராஜபவனம் ச்ரீமதீம் ப்ரவிவேச' என்றபடி வீடு நோக்கிச் சென்றார்.

ஆண்டாளுடைய காதல் அத்யாச்சர்யமானது. துணிவுள்ளது. துயரமுள்ளது. தெளிவுள்ளது. ஜெயங் கொண்டது. இறைவனை நாடி நின்றவர்கள் பலர். இறைவனையே தாரக போஷக போக்யமாகக் கொண்டு நக்ஷத்ரங்கள் போல விளங்கியவர்களில் மஹோந்நத பத மடைந்தவர் இம்மாதரசியே. இவ்வாண்டாள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாராக.

---

ஸ்ரீ:

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்

### ஸர்வதாரி ஸூ வைகாசி (வ்ருஷப) மீ

| | | | |
|---|---|---|---|
| 14—5 -48 | 1உ | வெள்ளிக்கிழமை ... | சூந்ய திதி, விஷ்ணுபதி, ஸங்க்ரமண தர்ப்பணம் |
| 15—5—48 | 2உ | சனிக்கிழமை ... | சூந்ய திதி |
| 16—5—48 | 3உ | ஞாயிற்றுக்கிழமை ... | வ்ருஷப சுக்ல அஷ்டமி திதி |
| 17—5—48 | 4உ | திங்கட்கிழமை ... | வ்ருஷப சுக்ல நவமி தசமி திதி த்வயம் |
| 18—5—48 | 5உ | செவ்வாய்க்கிழமை ... | வ்ருஷப சுக்ல ஏகாதசி திதி |
| 19—5—48 | 6உ | புதன்கிழமை ... | ஸர்வ ஏகாதசி வ்ரதம் |
| 20—5—48 | 7உ | வியாழக்கிழமை ... | காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ப்ரஹ்மோத்ஸவாரம்பம் |
| 21—5—48 | 8உ | வெள்ளிக்கிழமை ... | * ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தீ |
| 22—5—48 | 9உ | சனிக்கிழமை ... | ஸ்ரீ வரதராஜன் கருடோத்ஸவம் ஸ்ரீநம்மாழ்வார் திருநக்ஷத்ரம். |
| 24—5—48 | 11உ | திங்கட்கிழமை ... | ஸ்ரீ. அ. மடம் 35-ம் பட்டம் களத்தூர் ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம். |
| 26—5—48 | 13உ | புதன்கிழமை ... | ஸ்ரீ வரதராஜன் திருத்தேர் |
| 29—5—48 | 16உ | சனிக்கிழமை ... | வ்ருஷப க்ருஷ்ண ஸப்தமி திதி |
| 30—5—48 | 17உ | ஞாயிற்றுக்கிழமை ... | அதிதி |
| 31—5—48 | 18உ | திங்கட்கிழமை ... | அஷ்டமி திதி |
| 3—6—48 | 21உ | வியாழக்கிழமை ... | ஸர்வ ஏகாதசி |
| 5—6—48 | 23உ | சனிக்கிழமை ... | ஸ்ரீ. அ. மடம் 39-ம் பட்டம் ராஜமன்னார் கோவில் ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம் |
| 7—6—48 | 25உ | திங்கட்கிழமை ... | ஸர்வ அமாவாஸ்யை |
| 9—6—48 | 27உ | புதன்கிழமை ... | வ்ருஷப சுக்ல த்விதீயை த்ருதீயை திதி த்வயம் |
| 10—6—48 | 28உ | வியாழக்கிழமை ... | வ்ருஷப சுக்ல சதுர்த்தி திதி |
| 11—6—48 | 29உ | வெள்ளிக்கிழமை ... | பஞ்சமி திதி |
| 12—6—48 | 30உ | சனிக்கிழமை ... | வ்ருஷப சுக்ல ஷஷ்டி திதி |
| 13—6—48 | 31உ | ஞாயிற்றுக்கிழமை. | வ்ருஷப சுக்ல ஸப்தமி திதி |

* ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்திக்கு மூன்று முகூர்த்தம் [அதாவது: உதயாத் பரம் 6 நாழிகை] உள்ள த்ரயோதசி வேதை கூடாது. வாக்ய பஞ்சாங்கத்தில் த்ரயோதசி 5-நாழிகையே இருக்கிறபடியால், அதன்படி இன்றுதான் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி.

ஸ்ரீயை நம:

# ஆலய ப்ரவேசத்தால் ஏற்படும் விளக்கம்

[ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸய்யங்கார், பனஸ்வாடி பங்களா, மொரெகான், பம்பாய்.]

ஸுமார் 30 வர்ஷங்களுக்கு முன் ஸநாதந தர்மத்தில் விசேஷ அபிமாநமுள்ள காசி யூ. பீ. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி என்னும் ஒரு பெரிய ப்ரசாரகர் திருக்குடந்தைக்கு எழுந்தருளியிருந்தபோது, தாமும் பண்டித மாளவ்யா முதலிய ஸநாதந தர்மிகளும் அகில இந்திய காங்கிரஸுக்கு வருஷா வருஷம் கட்டுப்பாடாகச் சென்று, அங்கு வரும் ஸ்வல்பமான சீர்திருத்தக் காரர்களின் தீர்மாநங்களைக் கண்டித்து அவற்றைத் தோல்வி யடையும்படி செய்து, அதன் மூலம் அச் சீர்திருத்தக்காரர்களைத் தலைதூக்க முடியாதபடி செய்துவந்த வ்ருத்தாந்தங்கள் பலருக்கும் தெரிந்திருக்கும்.

அந்த ஸமயம் அடியேன் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும் காலமானதால், அவர்கள் சொன்னதைமட்டும் கேட்டுக்கொள்ள யோக்யதை யுடையவனாக இருந்தேனேயொழிய, அதன்மேல் எவ்வித அபிப்ராயமும் ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை.

அந்தக் காலத்தில் காங்க்ரஸும் பொதுவாகத் தேசமும், நம் ஸநாதந தர்மத்திலும் கொள்கை ஆசாரம் முதலியவைகளிலும் விசேஷ நம்பிக்கையும் பற்று முள்ளனவாகவே இருந்து வந்தன. பாலகங்காதர திலகர், பண்டித மதந்மோஹன் மாளவ்யா, கஸ்தூரிரங்கய்யங்கார் முதலிய ப்ரமுகர்கள், நம் ஆசாரங்களில் நம்பிக்கையும் பூர்வாசார்யர்களிடம் ப்ரதிபத்தியுமுடையவர்களாக இருந்தார்கள். அந்தக் காலம் சீர்திருத்தக்காரர்கள் தலையெடுக்காத காலமானதால், மற்றவர்கள் அவர்களை யடக்கிப்போட ஸுலபமாக இருந்தது. ஹரிபிலாஸ் சாரதா என்பவர், ப்ரௌடா விவாஹ மசோதா விவாஹ வயது மசோதா முதலியவற்றை எத்தனை தடவை சட்டஸபையில் கொண்டு வந்திருக்கிறார் என்பது எல்லாரும் அறிந்ததே. அவ்வளவு பக்வமான காலத்தில் ஏதோ சில சீர்திருத்தக்காரரை ஜயித்தோமென்பதை மாத்ர மெண்ணினார்களேயல்லது, நம் ஸமூஹத்தை உறுதிப் படுத்த வேண்டியவைகளில் யாரும் ஈடுபடாமலே இருந்துவிட்டார்கள். அதே காலத்தில் தேசத்து லௌகிக தநவான்களும் பணப் பெருக்குள்ள மற்ற மத ஸ்தாபநங்களும் தங்களிடமுள்ள த்ரவ்யத்தைக்கொண்டு விசேஷமாகப் பல ஊர்களில் சங்கங்கள் ஏற்படுத்தி, அநேக ப்ரசாரங்களை யனுப்பி, நம் ஸநாதந தர்மத்தின் மேன்மையையும் நம் சாஸ்த்ரங்களின் உத்க்ருஷ்டமான தத்வங்களையும் பெரியோர்களின் ஆசார சீலங்களையும் உயர்ந்த ஞானத்தையும் ஜனங்களுக்குள் ப்ரசாரப்படுத்தி வந்தார்கள். ஆனால் அதன் மூலம் காங்க்ரஸ் முதலிய ஸ்தாபநங்களில் தமக்கிருந்த செல்வாக்குக் குறையாமலிருப்பதற்கு வேண்டிய காரியங்கள் யாவுமே

செய்யப்படவில்லை. லௌகிக ஸநாதநிகளில் பலர் தங்கள் லௌகிக காரியங்களில் பணம் செலவு செய்வதேயொழிய, வைதிகர்களை யாதரிப்பதிலோ மத ஸம்பந்தமான பொதுக் காரியங்களில் தங்கள் பணத்தை உபயோகிப்பதிலோ ஈடுபடுவதில்லை. உயர்ந்த மத ஸ்தாபநங்களின் அதிபதிகளா யிருப்பவர்கள் விசேஷ ப்ரஹ்ம ஞானிகளானதாலும், அவர்கள் விசேஷமாக சாஸ்த்ரத்தில் சொன்னபடி ததீயர்களை ஆராதிப்பதில் ஈடுப்பட்டவர்க ளானதாலும், அவர்களுக்குப் பதிலாக லௌகிக கார்யத்தைக் கவனிக்கத் தகுந்த அதிகாரிகள் மேற்படி ஸ்தாபநங்கள் இல்லாததால், காலத்துக்குத் தக்கபடி ஸமூஹக் கட்டுப்பாட்டை வ்ருத்திசெய்ய அவர்களின் பணம் உபயோகப்படாமல் போய்விட்டது.

அதே காலத்தில் பல சீர்திருத்தக்காரர்கள் தங்களுக்குத் தோன்றியபடி நம் பழக்க வழக்கங்களைக் கண்டித்தும் பரிஹஸித்தும் பேசிப் பாமர ஜனங்களின் மனத்தைக் கலைத்துக் காங்க்ரஸ் முதலிய ஸ்தாபநங்களைக் கைப்பற்றினார்கள். அந்த ஸமயம் பார்த்துப் பாஹ்ய மதஸ்தர்கள், நம் மதத்தின் எல்லைக் கோடியிலுள்ள பஞ்சமர்களைக் கூட்டம் கூட்டமாகவும் மற்றவர்களைத் தனித் தனியாகவும் தங்கள் மதங்களில் சேரும்படி செய்து, அவர்களை நம் மதத்துக்கு விரோதிகளாகவும் தங்கள் மதத்துக்கு ப்ரசாரகர்களாகவும் செய்து கொண்டார்கள். மேலே சொன்ன காரணங்களால் ஸநாதநமான நம் மதம் கட்டுப்பாட்டில் குலைந்தது. அதன் பயனாக அநேக சீர்திருத்தச் சட்டங்களும் மதத்தில் தலையிடலாயின; ஆலய ப்ரவேசம் முதலிய கார்யங்களும் நிகழ்ந்தன.

இதிலிருந்து நாம் அறிந்துகொள்வ தென்ன? இப்பொழுதுகூட, தேசத்திலுள்ள பொது ஜனங்களிடம் போய் அவர்கள் மனதை யறிந்தால், விசேஷமாக எல்லாரும் ஸநாதந தர்மத்தில் பற்றுள்ளவர்கள் என்று தெரியவரும். நகரங்களில் மாத்ரம் சிலர் நவீந நாகரீகத்தி லீடுபட்டவர்கள். அப்படிப்பட்ட பொது ஜனங்களுக்கு நம் மதாசாரங்களைப் போதிப்பிக்க நாம் ப்ரசாரங்களை ஆயிரக்கணக்கில் தயார்செய்து ப்ரசாரம் செய்யவிட்டு, ஆங்காங்குத் தர்ம ஸபைகள் ஸ்தாபித்து, எல்லா ஜனங்களுக்கு முள்ள ஆஸ்திக புத்தியை வளரச் செய்யவேண்டும். ப்ரஹ்ம க்ஷத்ரிய வைசிய சூத்ரர்களுக்குத் தங்கள் தர்மங்கள் இன்னின்னவை யென்று அறியும்படி செய்யவேண்டும். இங்கு ஒரு விஷயம். தற்சமயம் சீர்திருத்தக்காரர்களும் மற்றவர்களும், ஏதோ ப்ராஹ்மணர்கள் மற்றவர்களை விட உயர்வாயும், இதரர்களைத் தலைதூக்கவிடாமல் வைத்திருப்பதாயும் ப்ரசாரம் செய்து, த்வேஷ புத்தியை யுண்டுபண்ணி வந்திருக்கிறார்கள். இது பிசகு. நம் வர்ணாச்ரம தர்மத்தில், ஒரு வர்ணத்தவர் தொழிலுக்கு மற்றொரு வர்ணத்தவர் போட்டியில் தலையிடாமலும், ஒருவிதமான விரோதம் வராதபடிக்கும் தொழில்கள் தழைத்தோங்கும்படி ஒரு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் நம்முள் அநேகர் ஸர்க்கார் வேலைக்குப் போவதால், தங்கள் மதமென்ன ஆசாரமென்ன என்பவற்றை யறியாமல் கேவலம் அர்த்

தார்த்தியாக இருப்பதுதான் துக்கத்தக்கது. ஆனதுபற்றி சிறுபிராயம் முதற்கொண்டே குழந்தைகளுக்கு நம் மதப்படிப்பையும் கற்பித்து இதில் பற்றுண்டாக்கச் செய்வது நம்மவருடைய கடமையாகும்.

அநேக ஆசார்ய பீடஸ்தர்களின் ஸந்ததிகள் லுப்தமாய் விட்டன என்பதைச் சொல்ல மிகவும் வ்யஸநமுண்டாகிறது. அதற்குக் காரணம், தங்களுக்கு சிஷ்யர்களின் ஆதரவுக் குறைவு என்பார்கள் ஆசார்யர்கள். சிஷ்யர்களைக் கேட்டால், தங்கள் ஆசார்ய ஸந்ததியில் உதித்தவர்கள் ஜ்ஞாதாக்களாக இல்லாமலிருப்பதால் தாங்கள் தக்க ஆசார்யர்களைத் தேடவேண்டியிருக்கிறதென்பார்கள். இந்தக் குற்றங் குறையில்லாமல் அவைகளுக்குப் புத்துயிருண்டாக்க வேண்டும்.

முக்யமாக நம் தேவாலயங்களில் கைங்கர்யம் செய்பவர்கள் எல்லாரும் படித்த ஜ்ஞாதாக்களாகவே இருக்கவேணும். அப்படிக்கிருந்தால் தான் அர்ச்சையில் ப்ரதிபத்தி ஏற்படும். அப்படிச் செய்வதற்குத் தேவாலயங்களிலுள்ள வருமானத்திலிருந்து கைங்கர்யபரர்கள் ஸந்ததியிலுள்ளவர்களுக்கு சாஸ்த்ரங்களைக் கற்பித்து உதவுவதுடன், பொது ஜனங்களும் தநத்தால் அவர்களுக்கு உதவிவரவேண்டும்.

இப்படிப் பொது ஜனங்களை விசேஷமாக ஆஸ்திகர்களாக நாம் மாற்றிவிட்டால், ஜனநாயக ஆட்சியில் அரசாங்கம் தானாகவே ஆஸ்திக மதத்தை யாதரிக்கும் அரசாங்கமாகிவிடும். நாம் தற்சமயம் அரசாங்க ஆட்சியில் தலையிட வேண்டாம். நம் தேசத்துக்கு ப்ரக்ருதம் ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டிருப்பது எல்லாருக்கும் ஞாபகமிருக்கவேணும். நாம் ஒன்றுபட்டுக் கட்டுப்பாடு குலையாமல் வாழவேண்டியது அவசியம். இல்லாவிடில் நம் தலைக்கோடியில் புதிதாக ஏற்பட்டிருக்கும் துருஷ்க ராஜாங்கம் பழைய காலத்துக் கோலாஹலத்தைச் செய்ய காத்துக்கொண்டிருக்கிறது. அதன் தற்கால நிர்வாஹிகளிலொருவர் 'இந்தியா முழுவதும் முஸல்மான் மதமாகப் போனால்தான் நான் த்ருப்தியடைவேன்' என்று கர்ஜித்துப் பேசினது ஞாபகமிருக்கவேணும்.

ஆனதுபற்றி, ஆலயப்ரவேசத்தைப் பல விடங்களிலும் சீர்திருத்தக்காரர் செய்துவிட்டார்களேயென்று வ்யஸநப்பட்டுக் கொண்டு அதிலேயே காலத்தைப் போக்காமல், மேற்கொண்டு வரக்கூடிய பெரிய ஆபத்தைத் தடுப்பதற்கு ஒரு முகமாக ப்ரயத்நப் படாவிடில், நாம் பிற்பட்டு துக்கிக்க நேரிடும் என்பது திண்ணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# குரு சிஷ்ய ஸம்வாதம்

## [விசித்ர சக்தி]

[ஸ்ரீ உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸம்ஸ்க்ருத காலேஜ், திருவையாறு]

குரு—ஆயுஷ்மந் ! 'ப்ரணிபாதவாந:' என்கிற சிஷ்ய லக்ஷண பூர்த்தியை உன்னிடமே கண்டேன் ; எங்கு வந்தாய் ?

சிஷ்யன்—ஸ்வாமியின் திவ்ய ஸூக்திகளைக் கொண்டு அடியேன் பல விசேஷார்த்தங்களைத் தெளியவேண்டி யிருக்கிறது. லோகோபகாரகம் ; கோபகாரக மன்று ; என்னைத் தீமனம் கெடுத்து அருளவேண்டும்.

குரு—ஸச்சிஷ்யனுக்கும் மறைக்கக்கூடிய தொன்றுண்டோ ?

சிஷ்யன்—க்ருஷ்ணமிச்ரன் ப்ரபோத சந்த்ரோதய மென்னும் நாடகத்திலே

'[illegible]'

என்று விசிஷ்டாத்வைதிகளை ஏசுகின்றார். 'பாஸ்கர மதஸ்தர் த்வைதம் அத்வைதம் உபய மார்க்கத்திலும் ப்ரஷ்டர் ; விசிஷ்டாத்வைதிகளோ பேதாபேதத்திலும் சேராது மூன்றிலும் வழி தப்பியவர்' என்கிறாரே ! அது விஷயமாகவே சில ஸம்சயங்களைத் தெளிந்துகொண்டுபோக வந்தேன்.

குரு—அஹங்காரன் வார்த்தை யன்றோ அது ? 'மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ்' எனும் அமுதமொழியை நினைத்திரு.

சிஷ்யன்—ஈச்வரனுக்கு அகடித கடநா சக்தி யுண்டன்றோ ? பேதம் அபேதம் இரண்டையும் ஈசனிடம் யாமும் ஒத்துக் கொண்டு பாஸ்கராதிகளோடு ஒன்றாகலாமே.

"ப்ரஹ்மாஜ்ஞாநபக்ஷாதபி பாபீயாநயம் பேதாபேதபக்ஷ:"

என்று வேதார்த்த ஸங்க்ரஹத்திலே ஸ்ரீ பாஷ்யகாரர் அப்படி அருளிச் செய்யக் காரண மென்ன ?

குரு—பேதமும் அபேதமும் பரஸ்பரம் விருத்த தர்மங்கள் ; அவை ஈசனிடமும் சேரமாட்டா. விருத்த தர்மங்களைக் கடநம் செய்வது அகடித கடநா சக்தி யன்று. அவிருத்தங்களாயும் இதரர்களுக்கு சக்ய மல்லாதவையுமான கார்யங்களைச் செய்கையே அது.

“ தத்ஸாமீப்யோ விருத்த்யுத்பத்யவடியது ஸமவாயஶக்தி: க்வசித் ஸ்யாத்,
ஜைவம் வ்யாப்யாத் ஸமஸ்த்யைந்யஷ்நிதந ஸம்ஸகைஷ்ஸ்யாதாஶ்ரத்வஸித்தே: ”

என்னும் தத்வமுக்தாகலாப ச்லோகார்த்தத்தை அநுஸந்தித்துத் தெளிவாய்.

சிஷ்யன்—அஜ்ஞத்வ ஸர்வஜ்ஞத்வங்களும், ஸுகித்வ து:கித்வங்களும், தத்தேகவர்த்தித்வ ததிதரவர்த்திதங்களுமாகிய இவை விருத்த தர்மங்க ளாகை யாலே ஸர்வ ஶக்தியிடமும் அவை சேரமாட்டாவென்று தெளிவாகின்றது. திருவிண்ணகர் எம்பெருமான் விஷயமான ‘ நல்குரவும் செல்வமும் ’ என்கிற திருவாய்மொழியில் விருத்த தர்ம ஸமுச்சயம்போல் காண்கிறதே ; இங்கு “ அகடிதகடநம் ப்ராஹ க்ருஷ்ணம் ஶௌரி: ’ என்று ஸ்ரீ தேசிகன் தாத்பர்ய ரத்நாவளியில் அருளியு மிருக்கிறரே ?

குரு—பரஸ்பர விருத்த பதார்த்தங்களை எம்பெருமான் தனக்கு விபூதியாக வடிப்பித்து நிற்கிறன் என்பது இத்திருவாய்மொழியின் கருத்து. ஸம்பந்நனு வும் அப்படி அல்லாதவனுகவும் நரகமும் அதல்லாதவனு மித்யாதியாக இதன் தாத்பர்ய மன்றே. இங்கு ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் அருளியதை ஊன்றித் தெளிவாய். அதாவது:—

“ தஸ்ய அத்வவாதே ஹிவிஷயம் ப்ரஹ்ம: நவ நஷ்யாஹ தஸ்யா தயாவஸிதாஜே ” என்றும்

“ தத்வஸ்ய ஹி ச தத்வஸ்யவ்யக்தம் விருத்தம். நத தஸ்யைவ ஸந்தோஷ நைகயஜ்ஞ யொஹராவயிகம் ஸஹக்தம் ”

என்றும் அங்கே ஸ்ரீ தேசிகன் அருளியது.

சிஷ்யன்—மிதஜ்ஞனை அடியேனை நன்ருகத் தெளிவிக்கவேணும்.

குரு—‘ பராஸ்ய ஶக்தி: ’ என்று ச்ருதி ப்ரஸித்தமான அகடிதகடநா ஶக்திமத்வத்தை வைதிகர் ஒவ்வொருவரும் மதாந்தரஸ்தர் உள்பட இசைந்தே இருக்கிருர்கள். விருத்த ஸமுச்சயத்தை அவர்களு மிசையவில்லை. ஸகுணத்வ நிர்க்குணத்வங்கள் ஸமுச்சயம் பெறமாட்டாதவை. ஆகவே ஒன்று ஆரோபிதம், மற்றொன்று ஸத்யம் என்றுர்கள் அத்வைதிகள். ஈச்வரன் விசித்ரசக்தி யாகையாலே இவ்விரண்டும் அவனிட முண்டு என்று அவர்கள் கொள்ளத் துணியவில்லை. ப்ரபஞ்சம் ஸத்விலக்ஷணமும் அஸத்விலக்ஷணமும் என்கிருர்கள். இங்கு விருத்த தர்ம ஸமுச்சயம் வருமே என்று ஶங்கித்து, அது வாராத ரீதியில் ஸதஸத் விலக்ஷணத்வத்தை அவர்கள் பரிஷ்காரம் செய்கிருர்கள். பேதாபேத வாதிகளான ஜைநர்களும் ஜைந கந்தி வேதாந்திகளான பாஸ்கராதிகளும் பேதாபேதங்களுக்கு உலகில் விரோதம் காணுமையால் விருத்த ஸமுச்சய மில்லை என்றுர்கள்.

சிஷ்யன்:—அப்படியாகில் அவர்களை விருத்த தர்ம ஸமுச்சயவாதிக ளென்று நம் ஆசார்யர்கள் தூஷிப்பானேன்?

குரு—பேதாபேதங்களுக்கு விரோதம் உலகில் காண்கையால் அதை மறுக்க முடியாதென்று ஸ்தாபநம் செய்து, விருத்த ஸமுச்சயமே பலிக்கும் என்றார்கள் ஆசார்யர்கள். ப்ரதிவாதிகளின் நினைவில் விருத்த தர்ம ஸமுச்சய மில்லை.

"यदपि क्वचिद्दृष्टं छायातपयोरपि परयोर्न विरुद्धतेति तदयुक्तम्। नहि शीतोष्णतमःप्रकाशादिवच्छायातपावेकस्मिन् वस्तुनि वर्तेते"

இத்யாதி ஸமந்வயாதிகரண ஸ்ரீ பாஷ்யத்தை ஸ்மரிப்பிக்கிறேன்.

சிஷ்யன்:—சீதோஷ்ண தம: ப்ரகாசாதிகளுக்கு விரோத மிருப்பதாக வன்றோ அங்கும் உள்ளது? இவைகளுக்கு ஈச்வரன் ஆதாரமாவது எப்படி? விருத்தஸமுச்சயம் போலிருக்கிறதே. 'நல்குரவும்' திருவாய்மொழியில் இவற்றுக்கு ப்ரஹ்மத்தினிடம் ஸாமாநாதிகரண்யம் காண்கிறதே.

குரு—உன்னை நான் ஒரு கேள்வி கேட்கிறேன். பூதலத்திலே சீதோஷ்ணங்களும் தம:ப்ரகாசங்களு மிருப்பதால் இவைகளுக்கு விரோத மெப்படி வந்தது? அறிவாயா?

சிஷ்யன்—ஸ்வாமி அநுக்ரஹத்தினால் இப்பொழுதுதான் தெளிந்தேன். சீதமான பதார்த்தம் வேறு; உஷ்ணமான வஸ்து வேறு. இவை பூதலத்தில் பிந்நபிந்ந ப்ரதேசங்களிலேயே யிருக்கக்கூடியவை. அவை யவை யிருக்கும் ப்ரதேசங்களில் அவற்றோடு பூதலம் ஸம்பந்தம் பெற்றுள்ளது. பூதலத்தில் இவை ஒரு ப்ரதேசத்திலே ஸமுச்சயம் பெறவில்லை. ஒரு குறிப்பிட்ட ப்ரதேசத்திலே சீதோஷ்ண த்ரவ்யங்கள் ஸஹாவஸ்தாநம் பெறமாட்டா. இதுதான் இவைகளுக்கு விரோதம். அததற்குரிய ப்ரதேசத்தின் வாயிலாக அவையவை தோறும் பூதலம் ஸம்பந்தம் பெற்றிருப்பதுபோல், ஈச்வரனும் அவ்வவற்றிற்குரிய ப்ரதேசத்தில் அவ்வவற்றிற்கு அந்தர்யாமியாய் நிற்கிறான். ஒரே தேசத்திலே சீதோஷ்ணாதிகளுக்கு ஸ்திதியானது விருத்தம். தேசபேதத்தாலே விரோத மில்லை. தேசபேதத்தாலேயே அவற்றோடு பூதலாதிகளைப்போல் ஸம்பந்தம் பெறுகிறானீசன்; நியந்தாவுமாகிறானென்பது தனிச் சிறப்பு.

குரு—முன் உதாஹரித்த ந்யாயஸித்தாஞ்ஜந ஸ்ரீஸூக்தியின் பொருள் இதுவே. ந்யாயாசார்யராகிய உதயநரும் குஸுமாஞ்ஜலியில் இதை வெளியிட்டிருக்கிறார். பரஸ்பர விருத்த தர்மாச்ரயமாய் ஒரு வஸ்து இருக்கமாட்டாது. விருத்த தர்மங்களுக்குப் பிந்ந பிந்நங்களாய் ஆச்ரயங்களா யிருக்கும் இரண்டு வஸ்துக்களோடு மற்றொன்று ஸம்பந்தம் பெற்றிருப்பதில் விரோத மில்லை என்பது அதன் பொருள்.

சிஷ்யன்—கபிஸம்யோக ததபாவங்க ளிரண்டையும் மூல தேசத்திலேயே இசைவது விருத்த ஸமுச்சயம். ஒரே வ்ருக்ஷத்திலே ப்ரதேச பேதத்தாலே இவை இருப்பதில் விரோதமில்லை யன்றோ?

குரு—அந்த ரீதியிலே ப்ரதி நியதங்களான ப்ரதேசம், காலம், ஆச்ரயம் ஆகியவற்றிலுள்ள அவ்வவ்வஸ்துக்களுக்கு ப்ரகாரியாய் நிற்பது அகடிதகடனா சக்தியினாலே யாயிற்று. இதுவே 'நல்குரவும்' திருவாய்மொழியி லுள்ளது.

" வ்யாவாதஸஹிநேந்த்ரூஷ நிதாரஹஸ்ஸஸ்கஷ்ஹஸ்ய தாத்ரூக்வஷிதெ: "

என்று தத்வமுக்தாகலாப ஸ்ரீ ஸூக்திக்கு நிதர்சந ஸ்தலம் 'நல்குரவும்' திருவாய்மொழி.

சிஷ்யன்—பரஸ்பராபாவ ரூபங்களாகவோ அவற்றுக்கு வ்யாப்யங்களாகவோ உள்ள பதார்த்தங்கள் எந்தத் தேசத்திலோ காலத்திலோ விருத்தங்களாய் ப்ரமிதங்களோ அதே தேசத்தில் அதே காலத்தில் அவற்றுக்கு ஸாமாநாதிகரண்யத்தைக் கொண்டால் விருத்த ஸமுச்சயம். ப்ரதேச பேதத்திலும் கால பேதத்திலு முள்ள அவற்றோடு அந்தர்யாமியா யீசன் நிற்பதில் விருத்த ஸமுச்சய கந்தமு மில்லையே. நிர்க்குணத்வ ஸகுணத்வங்களும், பேதாபேதமும், அஜ்ஞத்வ ஸர்வஜ்ஞத்வங்களும் ஏகத்ரைவ வித்யமாநத்வ தஉபாவங்களும் பரஸ்பராபாவ ரூபங்களாய் விருத்தம். ஸுகித்வ து:கித்வங்கள் பரஸ்பராபாவ வ்யாப்யங்களாய் விரோத முள்ளவை. ஏககாலத்தில் ஏகாச்ரயத்தில் இவை சேரமாட்டா. இவற்றுக்கு ப்ரஹ்மத்தில் ஸமுச்சய மென்பது விருத்த ஸமுச்சயம். இது அகடிதகடனா சக்தியால் இருப்பதாக நினைக்க வொண்ணாது. இனி யறிந்தேன்; தலையல்லால் கைம்மாறிலேன்.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# செய்திகள்

(1)

## ஹிந்து மதமும் பண்பாடும்

(புத்தகம் எழுதுவோருக்குப் பரிசுகள்)

189245

அடியில் கையொப்ப மிட்டவர், 14—11—47-ல் விடுத்துள்ள அறிக்கைப்படி 'ஹிந்து மதமும் பண்பாடும்' என்பதைப்பற்றிய நூலுக்கு அளிக்கும் ரூ. 1000 பரிசைத் தவிர, இரண்டாவதாகத் தேர்ந்தெடுக்கும் புத்தகத்துக்குத் திருச்சினாப்பள்ளி அட்வோகேட் ஸ்ரீமான் R. ஸ்ரீநிவாஸையர் அவர்கள் ரூ. 500 அளிக்க முன்வந்துள்ளார். புத்தகம் எழுதுவதற்கும் பரிசுத் திட்டத்திற்கும் நிபந்தனைகள், முன் குறிப்பிட்ட ரூ. 1000 பரிசுக் குள்ளவைகளே.

அம்ருத விலாஸம்
சென்னை 10
25-2-1948

எம். சுப்பிரமணியன்
[ரிடையர்ட் அக்கௌண்டெண்ட் ஜெனரல்]

* * * *

(2)

## ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸபா, தேரழுந்தூர்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா மாசி மீ-த்து ஸஞ்சிகை 35-வது பக்கத்தில், ஷை ஸபா கார்யதர்சி ஸ்ரீ கடாம்பி நரஸிம்ஹாசார்யர் எழுதியுள்ள விஷயங்கள் தேரழுந்தூர் கம்பர் கழகத்தின் சார்பில் வ்யய௵ மார்கழி மீ புநர்வஸு நக்ஷத்ரத்தில் ஆரம்பிக்கப் பெற்ற கம்பர் கல்விக் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவானது, நடந்த ஸர்வஜித்௵ மார்கழி மீ புநர்வஸு நக்ஷத்ர திநமாகிய 29–12–47-ல் நடந்ததென்றும், அதற்காக ஷை விஷயத்தில் கண்டவர்கள் தேரழுந்தூர்க்கு வந்தார்களென்றும், ஷை விழா அன்றைத் தினம் காலை 9-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டுப் பகல் 1-மணிவரை கோவிலுக் கடுத்த வஸந்த மண்டபத்தில் நடந்ததென்றும் தெரிவருகிறது. ஸ்ரீ வி. ஸஹ. நாம ஸபையாரும் கம்பர் கழகத்தாரும் மிகவும் ஒற்றுமையாக அவ்வூரில் பாடுபட்டு வருவது மிகவும் போற்றத்தக்கது.

N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
[அட்வொகேட், மதுரை]

* * * *

(3)

## ஸ்ரீமத் கருடபுரம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனின் மூன்ருவது வார்ஷிக ஆராதந மஹோத்ஸவம்

நாளது ஸர்வதாரி௵ சித்திரை மீ 13-ம் உ ஞாயிற்றுக்கிழமை (25—4—48) ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமியினுடைய மூன்ருவது வார்ஷிக ஆராதந மஹோத்ஸவம், வேதபாராயணம் திவ்யப்ரபந்த ஸேவை முதலியவைகளுடன், 21—4—48 புதன்கிழமை திநம் ஆரம்பித்து, 25–4–48 ஞாயிற்றுக்கிழமை சாத்துமறை ஸம்பாவனை ஸ்ரீ பாதுகா தீர்த்த ப்ரஸாதாதிகளுடன், ஸ்ரீ மதுராந்தகத்தில் தேரடி வீதியில் ஸ்ரீ ஸ்வாமியின் பூர்வாச்ரமத் திருமாளிகையில், கருடபுரம் சின்னஸ்வாமி மூலமாக நடத்தப்படும். இம் மஹோத்ஸவம் சென்ற வர்ஷம் திருப்பாப்புலியூர் அட்வொகெட் ஸ்ரீ உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, ஸெகந்திராபாத் ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாள் முதலியோர்களின் விசேஷ ஸஹாயத்தால் நடந்தேறியது. இவ்வர்ஷம் ஸ்ரீ ஸ்வாமியினிடம் ப்ரதிபந்நர்களும் ஸ்வாமி திருவடிகளும் இதில் அந்வயித்து க்ருதார்த்தர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கப்படுகிறது.

கருடபுரம் தி. ஈ. ஸ்ரீநிவாஸாசார்யர்,
தேரடி வீதி, மதுராந்தகம்.

* * * *

(4)

## ஸ்ரீ பாஷ்யகார ஸித்தாந்த வர்த்திநீ ஸம்ஸ்க்ருத பாடசாலை, சென்னை.

21—3—48 ஞாயிற்றுக்கிழமை ஷை ஸம்ஸ்க்ருத கல்லூரியில் ஸ்ரீவித்யோல்லாஸிநீ ஸபையின் 20-வது வருஷக் கொண்டாட்டம், சென்னை ப்ரஸிடென்ஸி கலாசாலை ஸம்ஸ்க்ருத பேராசிரியர் டாக்டர் ஏ. சங்கரன் எம். ஏ. எல். டி. பி. எச். டி. அவர்களின் தலைமையில் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் மயிலை ஸம்ஸ்க்ருத கலாசாலை வேதாந்த போதகாசிரியர் ஸ்ரீ. ராமா சாஸ்த்ரிகள் "ஸம்ஸ்க்ருதம் நாம தைவீ வாக்" என்னும் விஷயத்தை ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் உபந்யஸித்தார். திவான் பகதூர்

கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்த்ரிகளும் மற்றும் சில பண்டிதர்களும் அவ்விஷயத்தைக் குறித்து விரிவாக உபந்யஸித்தனர். சிறுவர் இருவர்களின் ஸம்ஸ்க்ருத பாஷையில் ஸம்பாஷணையும், 'ஸாம்யம்' என்னும் விஷயத்தைப்பற்றி மற்றும் மூவர்களால் வாத ப்ரதி வாதமும் நிகழ்த்தப்பட்டன. தலைவர்களால் இவ்வைவருக்கும் ராமாயண ஸுந்தரகாண்டங்கள் பரிசாக வழங்கப்பட்டு, ஸம்ஸ்க்ருத பாஷையின் தற்கால ஸ்திதியையும், அது ரத்நாகரம் போன்றதென்றும், அது நம் இந்திய பாஷைகளின் மூலபாஷையென்றும், மற்ற பல பாஷைகளில் வெளிவராத உயர்ந்த விஷயங்கள் இதில் பொதிந்திருக்கின்றன வென்றும், எனவே பாஷையில் த்வேஷம் பாராட்டாமல் எல்லோரும் இதனைக் கற்கவேண்டுமென்றும், ஸ்வராஜ்யம் கிடைத்திருக்கும் இந்த ஸந்தர்ப்பத்தில் இப்பாஷை ஸ்வதந்த்ரமாக விளங்கவேண்டுமென்றும் அரியதோர் ப்ரஸங்கம் புரிந்தார். பின்னர் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் டி. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் வந்தனோபசாரம் கூற, மங்களத்துடன் கூட்டம் முடிவுற்றது.

T. S. ஸ்ரீநிவாஸையங்கார்,
*தலைமையாசிரியர்.*
[ஷை ஸபையின் ப்ரெஸிடெண்ட்]

(5)

### ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின்

## ஸ்ரீராமநவமிச் செய்தி

---

நாளது ஸர்வதாரி௵ சித்திரை௴ 5௳ (17—4—1948) சனிக்கிழமை ஸ்ரீராம நவமி வருகிறது. அன்று ஒவ்வொரு க்ராமத்திலும், நகரங்களில் ஒவ்வொரு தெருவிலும் அகண்ட ராம நாம பஜனை ஏற்பாடு செய்வது நலம். அகண்ட ராம நாம பஜனை யென்றால் ஊரில் உள்ளோரெல்லோரும் சேர்ந்து 24-மணி நேரமும் ஒரு மணிக்கொருதரம் மனுஷ்யர்கள் மாறி மாறி அன்று விடாமல் ராம நாம ஜபம் செய்யவேண்டும்.

மானேஜர்,
ஸ்ரீ காஞ்சீ காமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகள் மடம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய தஸ்மை ॥

# ஸம்பாதகரின் குறிப்புக்கள்

**ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலையின் ஆறுவது வார்ஷிக மஹோத்ஸவம்**

ஸ்ரீ மதுராந்தகம் சாஸ்த்ர பாடஶாலையின் ஆறுவது வார்ஷிக மஹோத்ஸவம் சென்ற பங்குனிமீ 14உ சனிக்கிழமை யன்று ஸ்ரீ மதுராந்தகத்தில் கொண்டாடப்பட்டது. ரிடயர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் ப்ரஹ்ம ஸ்ரீ N. சந்த்ரசேகர ஐயரவர்கள் அந்தக் கொண்டாட்டத்தில் அக்ராஸநம் வஹித்தார். மஹாமஹோபாத்யாய வித்யாரத்நாகரம் கொடவாசல் ஸ்ரீ. உப. வெ. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி உபந்யாஸத்தைச் செய்தருளினர். அநேக ஆஸ்திகர்கள் அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். ப்ரஹ்மஸ்ரீ சந்த்ரசேகர ஐயரவர்களுடன் அவருடைய பரம ஸுஹ்ருத்துக்களான ப்ரஹ்மஸ்ரீ R. S. வேங்கடராம ஶாஸ்த்ரிகள், ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ. C. D. வெங்கடரமணி, அட்வோகேட், ஸ்ரீ. C. T. விச்வநாதையர், விவேகாநந்தர் காலேஜ் டாக்டர் ஸ்ரீ. T. V. ராமாநுஜம், முதலான பெரியோர்களும் அப்பொழுது விஜயம் செய்தார்கள். இவர்களுடைய ஸாந்நித்யம் நமக்கு ஒரு பேராநந்தத்தைக் கொடுத்தது. இவர்கள் அப்ரார்த்திதர்களாக ஸ்வயமாக வந்தார்க ளென்பதே அந்த ஆநந்தத்துக்குக் காரணம். ரத்நங்கள் தேடப்படவேண்டிய வஸ்துக்களே; ஆனல் அந்த ரத்நங்கள் நம்மால் தேடப்படாமல் அவை ஸ்வயமாகவே உபநதங்க ளானல் அதனல் ஜநிக்கும் ஸந்தோஷம் அந்யாத்ருஶ மன்றே? அந்த ரஸாநுபவத்தை நமக்குக் கொடுத்த நமது ஆப்த ஸுஹ்ருத்துக்களுக்கு நாம் நமது ஹார்த்தமான க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

முதலில், ஸ்ரீ அஹோபில மடத்தில் எல்லாரும் ஒன்று சேர்ந்து அதிதிகளை யதாக்ரமம் தாம்பூல சந்தநாதிகளாலும் புஷ்ப மாலைகளாலும் உபசரித்து, அங்கிருந்து வேத கோஷத்துடனும் வாத்யத்துடனும் பாடஶாலைக்கு அவர்களை அழைத்துப்போய் அவ்விடத்தில் ஸபாத்யக்ஷருக்குப் பூர்ண கும்ப

ப்ரதாநம் செய்ய, பிறகு யாவரும் மண்டபத்திற்குள் ப்ரவேஶித்தனர். மேற்கொண்டு ஸதஸ் ஆரம்பமாயிற்று. அநந்தரம் ஸ்ரீ கார்யம் ஸ்வாமி, ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹித்து அனுப்பப்பட்ட அநுஶாஸந ஸ்ரீ முகத்தை ஸேவித்து அதன் பொருளை தெளிவாகத் தமிழில் விவரித்தார். இந்த ஆசாரணங்களெல்லாம் க்ரமமாக முடிந்த பிறகு மஹாமஹோபாத்யாயருடைய உபந்யாஸம் நடைபெற்றது. பகவத் பக்தியின் ஸ்வரூபத்தையும், அதனால் நமக்கு லபிக்கும் புருஷார்த்தத்தின் ஸ்வரூபத்தையும், ஸாமாந்ய ஜநங்களுக்கும் நன்றாக விளங்கும்படி அந்த ஸ்வாமி செய்தருளின உபந்யாஸத்தின் வைகரியைப் பற்றி நாம் என் சொல்வோம்? ச்ரோதாக்களெல்லாரும் ஏகாக்ரமான மநஸ்ஸுடன் அதை ஆதரித்து வந்தார்களென்பதே அதன் வைபவத்துக்கு ஒரு நிரூபகம். ந்யாய ஶாஸ்த்ரத்தில் பாரங்கதராயும், ஸ்வத: அதி ஸூக்ஷ்மமான புத்தி ஶக்தி வாய்ந்தவராயும், ஔபநிஷத வித்யையில் பூர்ண பரிசயம் செய்தவராயும், இம்மாதிரியான யோக்யதைகளுடன் 'ஸஜ்ஞாதிர நூதநஸ்ய விஶேஷயுக்தாம்' என்கிறபடி தமது ஹ்ருதயத்தில் தோன்றும் பாவங்களை ஸாமாந்ய ஜநங்களுக்குக் கூடத் தெளிவாக விளங்கும்படி உபபாதிக்கும் ஸாமர்த்ய விஶேஷத்தை உடையவராயும் இருக்கும் இந்த ஸ்வாமியின் உபந்யாஸமானது அதிமாத்ரம் போற்றத் தகுந்ததாக இருந்தது என்று சொல்வது சற்றேயாகும். மற்றுமொரு விஶேஷம் அந்த ஸ்வாமியிடம் உண்டு. சிற்சில ஸமயங்களில் ஶாஸ்த்ர வாக்யங்களுக்குப் பாவ விவரணம் செய்யும்பொழுது நூதநமான பாவ விஶேஷங்களை இந்த ஸ்வாமி வெளியிடுவார். இந்தப் பாவங்கள் நூதநமாயிருக்கையிலும், மிகவும் ரஸவத்துக்களா யிருப்பதைப் பார்த்து ரஸிகர்கள் ஆநந்திப்பார்கள். அன்று அந்த ஸ்வாமி செய்தருளின உபந்யாஸத்தில் அம்மாதிரியான ஒரு பாவ விவரணம் நேர்ந்தது.

'பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோऽர்ஜுந ।'

என்னும் பகவத் கீதா வாக்யத்தில் 'ஏவம்விதः' என்பதற்கு நமது ஆசார்யர்கள் 'யதாவஸ்திதமாக' [மாநுஷத்வம் முதலான ப்ரமத்திற்கு அநர்ஹத்வத்துடனும் அப்ராக்ருதத்வத் தன்மையுடனும் கூடினவனாக] என்று விவரணம் அநுக்ரஹித்திருக்கிறார்கள். நம் ஸ்வாமியோ வேறொரு அவதாரிகை வைத்துக்கொண்டு பின் வருமாறு தாத்பர்யம் ஸாதித்தார்:—'இஷ்டப்ராப்திக்கு ஹேதுக்களென்று ஶாஸ்த்ரத்தில் ப்ரஸித்தங்களாக இருக்கும் கேவலம் தபஸ் முதலியவைகளை நிராகரித்து விட்டு, பக்தி ஒன்றுக்கே நான் லப்யன் என்று சொல்லுகிறீரே; இது உபபந்நமா?' என்று ஒரு ஶங்கை வர, அதற்கு ஸமாதாநமாக, 'அஹமேவம்விதः' [நான் அப்படிப்பட்டவனே; ஶாஸ்த்ரம் எது

வேண்டுமானாலும் சொல்லட்டும்; இது என் மதம்; ஒரு அஞ்சலியே எனக்குப் போதும்; இது என் ஸ்வபாவம்] என்று அநுக்ரஹித்தான். இது ஒன்றுக்கும் கட்டுப்படாதவன் வார்த்தை போல இருக்கிறதே; இப்படிப்பட்ட பாவம் பகவானுடைய திருவுள்ளத்தில் தோன்றுமா?' வென்று கேட்கலாம். கீதாசார்யன் அப்படிப்பட்டவனே. 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்று, ஆதாரத்வ விசேஷத்தையுடைய ஆத்மலக்ஷணத்தை நிராகரித்து 'ஜ்ஞாநீ என்னுடைய ஸத்தைக்கு ஹேது' என்று சொல்லத் துணிந்தா னன்றோ? இப்படியும் சொல்லலாமோ வென்று எழும் சங்கைக்கு ஸமாதாநமாக 'மே மதம்' [இது என்னுடைய மதம்; சாஸ்த்ரம் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும்; அதைப்பற்றி எனக்கென்ன?] என்றும் சொன்னான். ஆசார்யர்கள், இந்தப் பாவத்தை உபபந்நமென்றும் இதுவும் ஒரு ரஸோக்தி யென்றும் ஒத்துக் கொள்ளவில்லையா? அம்மாதிரி என் 'ஸுஹ்ருதேவம்விய:' என்பதற்குப் பாவம் விவரிக்கக் கூடாது?' என்றிப்படி ஸாதித்த ரஸவத்தான இந்த விவரணத்தை ஸதஸ்யர்க ளெல்லாரும் மிகவும் ஆமோதித்தார்கள். இப்படிப்பட்ட ஒரு மஹான் நம்முடைய கொண்டாட்டத்தில் அந்வயித்தா ரென்றால் அது நமக்குப் பெருத்த பெருமையன்றோ?

ஆஸ்திக்யத்திலும் ஆசார்ய பக்தியிலும் ஈச்வர நிஷ்டையிலும் மிகச் சிறந்தவரான ப்ரஹ்ம ஸ்ரீ N. சந்த்ரசேகர ஐயரவர்கள் நமக்கு அத்யக்ஷராகக் கிடைத்ததும் நமது பாக்ய விசேஷமே. நமது தேசத்துக்கு அஸாதாரணங்களான தர்ம விசேஷங்கள் இப்பொழுது லோபத்தை அடைந்து விட்டனவென்றால், அதற்கு நம்முடைய ஔதாஸீந்யமே முக்ய காரண மென்றும், அந்தத் தர்மங்களைச் சரிவரப் பரிபாலநம் செய்யாமல் தமது மனம் போன போக்கில் நடக்கும் நமது சிறுவர்களை நாம் தகையாமல் விட்டுவிட்ட தன்றோ நமது தர்மங்களுக்கு இந்தத் துர்த்தசையை விளைத்துவிட்டது என்றும் சோகித்து, வேகத்துடன் அவர் செய்த உபதேசம் ச்ரோதாக்களுடைய மநஸ்ஸில் உண்மையான அநுசயத்தை ஜநிப்பித்தது. இப்பொழுது ஸம்ஸ்க்ருத பாஷைக்கு நேர்ந்துள்ள துர்த்தசையைப் பற்றியும், அதன் மீது நம்மவர்களுக்கே ஜநித்திருக்கும் மஹத்தான த்வேஷத்தைப் பற்றியும் அவர் மிகவும் துக்கித்துப் பேசினார். 'நாம் பரஸ்பரம் ஹிதைஷிகளாக இராமல் மத த்வேஷ மென்றும், ஸித்தாந்த த்வேஷ மென்றும், ஸம்ப்ரதாய த்வேஷ மென்றும், இம்மாதிரியான அல்ப காரணங்களைக் கொண்டு நமக்குள் இருக்கவேண்டிய ஸௌஹார்த்தத்தைக் கையுதறி நிற்பதைப்பற்றியும் மிகவும் வருந்தினார். அதைக் கேட்ட எல்லாரும் மனம் உருகி நின்றார்கள். பிறகு விவேகாநந்த காலேஜ் ப்ரதாந ஸம்ஸ்க்ருத ப்ரவசந கர்த்தா வாகிற ப்ரஹ்ம ஸ்ரீ வெங்கடராம சாஸ்த்ரி

கள், ச்லாகார்ஹங்களான சில வ்யாஹ்ருதிகளை அநுக்ரஹித்தார். பிறகு ஸ்ரீ கார்யம் ஸ்வாமி உபசாரோக்திகளைச் சொல்ல ஸதஸ் முடிவடைந்தது. ஒரு யாம காலம் எல்லாரும் மற்றை விஷயங்கள் எல்லாவற்றையும் மறந்து இந்தக் கோஷ்டீ ஸுகத்தை அநுபவித்து வந்தார்கள்.

* * * *

ஜந ஸாமாந்ய ஹித வாதிகள்

ஸ்வல்ப காலமாக இந்த ஜகத்தில் பெரியதொரு உபப்லவம் உண்டாகி வருகிறது. மேல்நாடுகளில் சீர்திருத்தக்காரர்கள் சிலர் ஒன்று சேர்ந்து தங்களை 'ஜந ஸாமாந்ய ஹித வாதிகள்' என்று சொல்லிக்கொண்டு சொத்து விஷயமாக அநாதி காலமாய் ஜநங்களுக்குள் வழங்கி வந்திருக்கும் பரிபாடியைத் தலை கீழாக மாற்ற ப்ரயத்நப்பட்டு வருகிறார்கள். அவர்கள் சொல்வதாவது:— பெருங்காற்றில் குப்பை கூளங்கள் காற்றின் வேகத்தால் ஒரு பக்கத்தில் ஒதுக்கப்பட்டும், மற்றொரு பக்கத்தில் ஒரு ரேணு கூட இராமல் கேவல பூபாகம் மாத்ரம் வெளிப்படுத்தப்பட்டும் காணப்படுவதுபோல, ஜகத் ஸ்திதியிலும் நமக்குப் புலப்படாத சில காரணங்களால் ஏராளமான ஸம்பத் சில ஜநங்கள் வசமாகச் சேர்ந்தும், மற்ற ஸாமாந்ய ஜநங்களிடம் எவ்வித த்ரவ்யமு மிராமல் நிஷ்களங்கமான தாரித்ர்யம் ப்ரகாசித்து வருவதும் பஹுசஃ நாட்டில் தென்படுகின்றன. பாங்கியில் கோடிக் கோடியாகத் தநத்தை வட்டிக்குப் போட்டு, அந்தத் தந மதத்தால் மதித்து நிற்கிறார்கள் சிலர்; உடுக்கப் போதுமான வஸ்த்ர மிராமலும் இரவுப் போஜநத்துக்கு வழியற்றும் வருந்துகிறார்கள் பலர். இது ந்யாயத்துக்கு ஒத்ததா? இது ஜகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு ஆகுமா?

'நமக்கு இப்பொழுது ராஜ்ய நிர்வாஹ விஷயத்தில் ஸர்வஸ்வாதந்த்ர்யம் கிடைத்திருக்கிறபடியால், ஏன் நாம் புதிய சட்டங்களைச் செய்து கீழ் விவரிக்கப்பட்டுள்ள துர்த்தசையை நிவர்த்திக்கக் கூடாது?' என்று சீர்திருத்தக்காரர்கள் வாதிக்கிறார்கள். பணக்காரர்களிடம் இருக்கும் பணத்தை ஸர்க்காரார் எடுத்துக்கொண்டு, அந்தப் பணக்காரர்களுடைய அவச்யமான தேவைகளுக்காக அந்த த்ரவ்யத்தில் ஒரு பாகத்தை அவர்களுக்குக் கொடுத்து விட்டு, மற்றைப் பெரும் பாகத்தை ஏழை ஜனங்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பதும், இதை ஸாதித்துக் கொள்வதற்காகத் தகுந்த சட்டங்களைச் செய்துவிடவேண்டு மென்பதும் அவர்களுடைய ப்ரயத்நம். நூறு ரூபாய்க்குக் குறைந்த சொத்து ஒருவரிடமும் இருக்கக் கூடாதாம்; ஆயிர ரூபாய்க்கு மேற்பட்டதும் ஒருவருக்கும் கூடாதாம். இதை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக அநுரூபங்களான சட்டங்களைச் செய்வதற்கு மஹா ஜநங்கள் ஒன்று சேரவேண்டு மென்று பெரிய ஸங்கங்களைச் சேர்த்து உபந்யாஸங்களை

யும் செய்து வருகிறார்கள். கஷ்டத்தால் வருந்தும் ஜனங்களுக்கு இந்த உபதேசம் காதில் விழுந்தவுடன் பெரிய உத்ஸாஹ முண்டாகி, அவர்கள் தலை கால் தெரியாமல் ஒரு வெறிபிடித்துப் பணக்கார் மீது பெருத்த த்வேஷம் பாராட்டி, ஆயதி எப்படி ஸம்பவிக்கு மென்பதை ஆலோசியாமலே மஹத்தான அக்ரமங்களைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். இது தேசத்திற்கே பெரியதொரு க்ஷோபத்தை உண்டாக்கி விடுமன்றோ? இந்த க்ஷோபம் நாலு பக்கங்களிலும் பரவிவருகின்றது. இச்சீர்திருத்தக்காரர்களின் ஸங்க்யை அதிகமானால் ராஜ்ய நிர்வாஹம் இப்பொழுது ப்ரஜைகளின் வசமிருப்பதால் அவர்கள் வசமாகிவிடும். அப்பொழுது லோகத்தில் அநேக மாறுதல்களும் நடைபெறலாம். அதிசீக்ரத்திலேயே இந்த மாறுதல்கள் நேரலாமென்று நினைக்க ஹேதுக்கள் காணப்படுகின்றன.

இந்தச் சீர்திருத்தக்காரர்கள் இதனுடன் த்ருப்தியடையாமல், மற்றுமொரு பெரிய புரட்சியைச் செய்ய ப்ரயத்நப்படுகிறார்கள். நாம் நமக்குள் ஜாதி வ்யத்யாஸத்தைப் பாராட்டி வருகிறோமாம். அதனால் நமக்குள் ஐகமத்யமும் அன்பும் குறைவு படுகின்றனவாம். ஜாதி வ்யத்யாஸத்தை ஒழித்து ஜாதியற்ற சுத்தமான ஒரு ஸ்திதியை உண்டுபண்ண வேண்டுமாம். இப்பொழுதே ஸர்க்காரார் அந்த அபிநிவேசத்துடனே அநேக சட்டங்களைச் செய்திருக்கிறார்கள். ஜனங்களின் பெயர்களில் ஜாதியைக் குறித்துக் காட்டும் பட்டங்களை அவரவர்கள் பெயர்களில் வைத்துக்கொள்ளக் கூடாதாம். ஸர்க்கார் அதீனமாக இருக்கும் போஜன சாலைகளிலும் மற்றும் பொதுப் போஜனசாலைகளிலும் ஜாதி வ்யத்யாஸத்தை பாராட்டக் கூடாதென்று சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. இந்தச் சீர்திருத்தக்காரர்கள் ராஜ்யம் வஹிக்கும்படி ஸம்பவித்தால் இன்னும் என்னென்ன ஸம்பவிக்குமோ அறியோம். ஒருவித விசேஷமுமற்று ஜன ஸமூஹம் முழுவதும் ம்ருகப்ராயமாக வர்த்தித்து வரவேண்டி வருமே என்பதை நினைத்தால் நம்முடைய மனஸ் நடுங்குகின்றது. ஆனால் அந்த நடுக்கம் நமக்குக் கொஞ்ச காலமே இருக்கும். பின்வரும் ஸந்ததியாருக்கு அது ஸஹஜமாகவே ஆகிவிடுமன்றோ? இதுவும் ஒரு ஆச்சர்யமே!

---

## அங்கம் 2–காட்சி 1.

[மேடையில் கஞ்சுகி தோன்றுகிருன்.]

(மிகவும் அலுப்பும் சலுப்பும் கொண்டு) ஆஹா! என்னே காலத்தின் மாறுதல்! மிகவும் கஷ்டம். இதோ என் கையிலிருக்கும் பிரம்புக் கொடியானது அப்பொழுது என் பால்ய வயதில் எவ்விதம் உதவியது! அக்காலத்தில் திரள்திரளாக மன்னர்கள் பகவானை ஸேவிக்க ஒருவர்மேல் ஒருவர் வந்துவிழும் காட்சியே காட்சி! அவர்களுக்கு அப்பொழுது என்ன அவஸரம்! என்ன பரபரப்பு! எத்தகைய பக்தி! ஆவேசம் வந்தவர்போல் 'நான் முன்னே நான் முன்னே' என்று ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு ப்ரவாஹம்போல் பாய்ந்து வருவர். அத்தருணம் அவர்களை யடக்கி ஒவ்வொருவராய் ஸேவித்து இன்புறுமாறு தடுத்து நிறுத்தியது இப்பிரம்புக் கொடி. இப்பொழுதோ அதன் நிலைமை எவ்விதம் உள்ளது? நரைத்த தலையும் அல்லாடும் அங்கமும் தளர்ந்த நடையுமுள்ள எனக்கு ஊன்றுகோலாக வல்லவோ அமைந்துள்ளது? இது மட்டுமோ? அப்பொழுது நான் அடக்கி ஸேவை செய்துவைத்த ராஜகுமாரர்களின் பரிஹாஸத்திற்கும் அல்லவோ இது ஹேதுவாகியது? ஐயோ! என் பிழைப்பே பிழைப்பு! எப்பொழுதும் மேன்மேலும் கார்யத்தின்மேல் கார்யம். முதுமை யடைந்து தள்ளாத காலத்திலும் சற்றேனும் விச்ராந்தி யில்லை. அந்தப்புர வேலை கூரிய கத்தி முனையில் நடப்பதுபோல் தான். இப்பொழுதும் கூட சூரஸேந மஹாராஜனின் கட்டளையைத் தலையால் தாங்கிச் செல்கிறேன். ஸூர்ய பகவானுக்காவது ஓய்வு இருக்கலாம். ராஜ ஸேவகர்களுக்கு அதுவும் கிடையாது. இப்பொழுது அரசன் இட்ட கட்டளை என்ன? 'காதம்பகா! நமது குல தேவதையானவள் வாஸந்திகா புரிந்த பூஜையைக் கண்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தனள். அதன் பயன் அவள் கோரிய வரனை அளித்ததென்று ஊரில் ஒரு வதந்தி உலாவி வருகிறது. அது என்ன உண்மை வ்ருத்தாந்தமா? அல்லது கட்டுக் கதையா? நீ சென்று தீர விசாரித்து வா என்றும் உத்தரவு. [நான்கு அடி சென்று] ஓஹோ! இதோ எதிரில் வருபவள் யார்? நமது குழந்தை வாஸந்திகாவின் ஸகி போல் தோன்றுகிறதே! ஆம்; ஆம்; மதுரிகா வல்லவோ வருகிருள்! இன்று என் பாக்யம்; நல்லதுதான். கும்பிடப்போன தைவம் குறுக்கே வந்ததுபோல் ஆயிற்று. அவள் முகமாய் குழந்தையின் வ்ருத்தாந்தத்தின் உண்மையை அறிய வேண்டும்.

[அரங்கத்தில் மதுரிகா தோன்றுகிருள். மிகவும் குதூஹலத்துடன் ஸேவித்து வணக்கமாய்,] ஐயா! காதம்பகா! தள்ளாத வயதில் எங்கு இவ்வளவு தூரம் புறப்பட்டது? மிக்க அவச்யமான கார்யம் போலும்! என்ன ஸமாசாரமோ? நான் அறியலாமோ?

காத:—ஆம் அம்மா; மதுரிகா! எனக்கு ஓய்ச்சல் எது ஒழிவேது? எப்பொழுதும் முக்ய கார்யம்தான். உன்னிடம் சொல்லாத விஷயம் என்ன

இருக்கிறது? நமது சூரஸேந மஹாராஜருக்கு ஸதா தமது புதல்வியைப் பற்றிய கவலையேயன்றி வேறில்லை. குழந்தை வாஸந்திகாவுக்குத் தக்க கணவன் கிடைக்கவேண்டுமே. தேவி அவள் மேல் க்ருபை கூர்ந்து அவள் மனத்திற்கு இசைந்த மணவாளனை அளித்தனளோ இல்லையோ என அவர் சிந்தை இங்கும் அங்கும் ஊசலாடுகிறது. ஆகவே ஸமாசாரம் ஏதாவது தெரிந்தால் அறிந்துவா என்று என்னை அனுப்பியுள்ளார் அரசர்.

மது :—என்ன! ஆனால் உங்களுக்கு ஒரு ஸமாசாரமும் தெரியாதா? வாஸந்திகா தேவியின் அருளைப் பெற்றாள். அது மாத்ர மன்று. இப்பொழுதோ வென்றால் கூர்மையான மன்மத பாணத்தினால் அடிபட்டு வருந்துகிறாள். ஆம், அரசன் கட்டளையிட்டதில் என்ன ஆச்சர்யம்! நமது மன்னனுக்கு ஒரே பெண் அல்லவோ? ஆகையால் பிள்ளைகளைக் காட்டிலும் பெண்ணின்மேல் அத்யந்த வாஞ்சை இருப்பது இயற்கை தானே!

காத :—ஆம்; அதற்கென்ன ஸந்தேஹம்? நூறு பிள்ளைகளைக் காட்டிலும் ஒரு பெண் மேன்மையானவள்தான். ஆனால் பெண்ணைப் பெற்றவர்களுக்கு எக்காலமும் கவலை ஒய்வதில்லை. இதோ பார்! லோகத்தில் பெண், பிள்ளை இருவரையும் லாலந பாலநம் செய்வது ஒரே ஸமம்தான். ஆனால் புதல்வியைப்பற்றியோ வென்றால், அவளுடைய ரூப குணங்களுக்கேற்ப கணவனைத் தேடுவது முதல் சிந்தை. எவ்விதமோ தக்க கணவனைத் தேர்ந்தெடுத்து விவாஹம் செய்தால் மட்டும் போதுமா? பெற்று வளர்த்த பெண்ணைப் புக்ககத்திற்கு அனுப்புவதில் ஏற்படும் வருத்தம், முற்றத் துறந்த முனிவர்களுக்கும் தப்புவதில்லை. அதற்குமேல் அப்பெண்மணி, தான் பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் நற்பெயரெடுத்து வாழும் வ்ருத்தாந்தம் கிட்டாவிடில் அடையும் வ்யஸநத்திற்கும் கவலைக்கும் கங்கு ஏது? கரை ஏது? பெண்ணைப் பெற்றவர்கள் பாடு என்றும் திண்டாட்டம்தான். அனைத்தும் சரியாக அமைந்து வாழ்ந்தால் அதைவிடக் கொண்டாட்டம் வேறு ஏது? ஆம்; அது இருக்கட்டும். ஆனால் வாஸந்திகா மிகவும் கஷ்ட தசையில் இருப்பதாகக் கூறினையே. வருந்தும் குழந்தைக்குத் தக்க உபசாரம் செய்யாமல் இப்பொழுது எங்குப் புறப்பட்டாய்?

மது :—ஐயா! காதப்பசா! இதுவும் என் தோழியின் கட்டளைதான். இதோ இப்பூங்காவனத்தில் தலம் புரியும் விஜ்ஞாநவதி அம்மையாரை நீர் அறியீரோ? பூஜ்யையாகிய அவ்வன்னையை அழைத்து வரும் பொருட்டுச் செல்கின்றேன்.

காத :—அது என்ன ஸமாசாரம்? எதற்காக அவளை அழைத்துவரப் போகிறாய்? நான் அறியலாமாகில் கூறுவாய்.

மது :—உங்களுக்குக் கூறுமலிருக்க இதில் என்ன ரஹஸ்யம்? விஜ்ஞாநவதி முக்காலமும் அறிந்த தபஸ்வி அல்லவா? ஆகையால் அவளை அஹோபி

லேஶன் வாஸந்திகாவை மணம் செய்துகொள்வரா இல்லையா என்று சகுநம் கேட்பதன்பொருட்டுத் தான் அவளை அழைத்துவரச் செல்கிறேன்.

காத :—[மனத்திற்குள்] அறியவேண்டிய விஷயம் அறிந்துக்கொண்டேன். பகவத் க்ருபையால் வந்த கார்யம் நிறைவேறியது. [ப்ரகாஶமாய்] அம்மா மதுரிகே! நாழிகை யாய்விட்டது. அவரவர் கார்யங்களை நிறைவேற்றுவதன் பொருட்டுச் செல்வோம்.

2-ம் அங்கம் முதல் காட்சி முற்றிற்று.

---

## 2-ம் அங்கம்–2-ம் காட்சி.

[ அரங்கத்தில் ஸகிகளுடன் விரஹவேதனை தோன்ற
வாஸந்திகா தோன்றுகிறாள்.]

வாஸ :—'தோழிமார்களே! போதும் போதும் மேன்மேலும் அனலை வாரி யிறைக்கும் உங்கள் ஶைத்யோபசாரங்கள். மன்மத பாணத்தினால் அடிபட்டுத் தவிக்கும் எனக்குப் பச்சைக் கற்பூரம் கலந்த சந்தனக் குழம்பை ஏன் பூசுகிறீர்கள்? அது புண்ணிற் புளிப் பெய்தாற் போலன்றோ வருத்துகிறது? விரஹாக்நியால் வருந்தும் எனக்கு நீங்கள் தெளிக்கும் பன்னீர்கூட, கடுஞ் ஜ்வரம் கண்டவனுக்குக் குளிர்ந்த ஜல ஸ்நாநம்போல் எரிச்சலை அதிகப் படுத்துகிறது. இராப் பகல் நித்ரையற்றுக் கலங்கிச் சிவந்து கிடக்கின்றனவே எனது கண்கள்! அவைகளின்மேல் அழகிய தாமரைப் புஷ்பங்களை ஒத்துகிறீர்கள். இச்சிகித்ஸை கண்வலிக்காரன் முன் ஒளி மிக்க விளக்கைக் கொண்டுவந்து வைப்பதுபோல் இருக்கிறது [இவ்விதம் புலம்பிக்கொண்டிருந்தவள் திடீரென்று மூர்ச்சையாகிறாள். தோழிகளின் முகம் வருத்தத்தால் வாடின. ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு

தோழிகள்:–ஐயோ! இதென்ன! விதியின் செயல்! நாம் செய்த ஸகல ஶிஶிரோபசாரங்களும் மந்த மதிக்குச் செய்த குரு உபதேசம்போல் நிஷ்பலமாக வல்லவோ முடிந்தது! ஆகையால் அடுத்ததாக நாம் இப்பொழுது என்ன செய்தால் நலம்? என்று பேசிக்கொண்டனர்.

ப்ரமரிகா:–[மிக்க சிந்தையும் கலக்கமும் ததும்ப] இது என்ன ஸம்பவிக்ககூடிய கார்யமாக எனக்குத் தோன்றவில்லையே! தாழ்ந்த குலத்தில் உதித்த வேடுவப்பெண் எங்கே! ஸகல தேவதைகளுக்கும் ஶிரோ ரத்நமாக விளங்கும் அஹோபிலேஶன் எங்கே! நமது தோழியின் அபிலாஷை எவ்விதம் மங்களகரமாக முடியும்? மலைக்கும் மடுவுக்கும் உள்ளதல்லவோ உள்ளது?

சது :—தோழி! போதும் போதும் உனது கவலை. இது ஏன் நேரிடக் கூடாது? ஆகாயத் தாமரையா என்ன? பகவத் க்ருபை இருந்தால் அனைத்தும் ஸம்பவிக்கும். ஏன்! குமார ஸ்வாமி வேடுவப் பெண்ணாகிய வள்ளியை மணம் புரிந்த கதையை நீ கேள்விப்பட்டதில்லையா என்ன? அது உலக

ப்ரஸித்த மாயிற்றே. அதே போல் லக்ஷ்மி ந்ருஸிம்ஹன் வாஸந்திகாவை ஏன் பரிணயம் செய்துக்கொள்ளக்கூடாது? பெண்களே கண்டு மோஹிக்கும் வண்ணம் அல்லவோ உள்ளது இவளது ஸௌந்தர்யம்? இப்பெண்மணியைக் கண்டு எத்தகைய தேவனுகட்டும், மனிதனுகட்டும், எவன் இவளது மோஹ வலையில் விழாமலிருப்பான்?

ப்ர.—ஆம்; அவச்யம் நடக்கலாம். இவள்சேற்றில் முளைத்த செந்தாமரை; மண்ணில் தோன்றிய மின்னல்கொடி; இவள் எவ்விதம் அப்புருஷோத்தமனது திவ்ய கடாக்ஷத்திற்குப் பாத்ரம் ஆகாமல் இருப்பள்? ஆனல் இவர்களைச் சேர்த்து வைப்பதற் குரிய உபாயத்தைத்தான் சிந்திக்கவேண்டும்.

சது:—என்? இதில் என்ன கஷ்டம்! அன்றைதினம் வனதேவதையின் பூஜையை முடித்துக்கொண்டு திரும்பி வருமளவில் இருவரைக் கண்டோமல்லவா? அவர்கள் யாரோ விநோதமாக வேட்டையாடுவதன் பொருட்டு வேடுவ வேஷம் தரித்துக்கொண்டு வந்தவர்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் அநேகமாக அஹோபிலேசனுகிய லக்ஷ்மி ந்ருஸிம்ஹனும் அவர் தோழனுமாகவே இருக்கவேண்டும். நமது வாஸந்திகாவை அவர் அன்புடன் கண்களால் பருகுவார்போல் பார்த்துக்கொண்டிருந்தார். அப்பெருமான் அவச்யம் இப்பெண்மணியைப் பாணிக்ரஹணம் செய்து காப்பாற்றுவான்.

ப்ர:—[மிகவும் வருத்தம் தோய்ந்த குரலில்] நேரிடலாம்; ஆனல் இப்பொழுது இவள் நிலைமைக்குப் ப்ரிஹாரமாக என்ன செயயலாம்? அதுதான் விளங்கவில்லை இவளோ தாமரைப் புஷ்பங்கள் அசங்குவதால் விழும் நீர்த்துளிகளைக் கண்டு அஞ்சி இங்கும் அங்கும் அலையும் வண்டுகளைப்போல் பனிநீர் தெளிப்பதையும் தாங்காத ஸந்தாப நிலைமையி லல்லவோ இருக்கிருள்!

சது:—[வாஸந்திகாவை உற்று நோக்குகிருள். ஒரு பக்கம் ஆச்சர்யம்; ஒரு பக்கம் பயம். உணர்ச்சி ததும்ப] தோழி! இதென்ன விந்தை! நம் ஸ்நேஹிதையைக் கவனித்தாயா? யாரோ ஒரு ப்ரபு பேசுவதைக் கேட்டு விடையளிக்க இச்சையுள்ளவள்போல் உதட்டை அசக்குகிருள். மேலும் சூந்யமாகிய ஆகாயத்தில், யாரையோ ஆலிங்கநம் செய்துகொள்பவள்போல் இரு கைகளையும் விரித்துத் துழாவுகிருள். ஆஹா! இதென்ன சித்த ப்ரமையா! ஆகாயத்தில் எவரைக் கண்டு இவ்விதம் செய்கிருள்? உருவெளித் தோற்றமோ? அல்லது நமது கண்களுக்குத்தான் ஒன்றும் புலப்படவில்லையோ?

[மறுபடியும் அவளைச் சற்று உற்று நோக்குகிருள்.]

[உடனே ஆநந்தத்துடன்] ஓஹோ! நமது தோழி ஸ்வய அறிவை அடைந்தாள் போலும்! நமது பாக்யமே பாக்யம். மந்மத தாபத்திலிருந்து சற்று விடுதலையடைந்தவள்போல் தோன்றுகிருள்.

ப்ர:—[உத்ஸாஹத்துடன்] தோழி! வாஸந்திகா! ஏன் இவ்வளவு நேரம் எங்கள் வார்த்தைகளைக் கேட்டும் விடை கூருமல் இருக்கிருய்? இப்பொழுது

உன் தேஹம் சற்றுச் சுக மடைந்ததா! யாரிடம் நீ இவ்வளவு நேரம் பேசினாய்? ஆகாயத்தில் யார் உனக்குக் காட்சி யளித்தது?

வாஸ:—தோழியர்காள்! உங்களிடம் பேசாமல் எனக்கென்ன வந்தது? ஏனோ எனது அறிவே என் வசம் இல்லை. இப்பொழுது நான் யாரோடு வார்த்தை யாடினேன் தெரியுமோ? அவரை யாரென்று நினைக்கிறீர்கள்? உங்களிடம் கூறாத ரஹஸ்யமும் உண்டோ? உங்கள் மனம் வேறு என் மனம் வேறு என்று எண்ணாதீர்கள். இதோ உரைக்கிறேன். கவனமாய்க் கேளுங்கள்.

[சற்றுமுன் நடந்ததை நினைத்து ஆநந்தமும் உணர்ச்சியும் மேலிட்டு]

என்னே எனது பாக்யம்! என்ன ஆச்சர்யம்? இது நடக்கக்கூடிய ஸம்பவமா? ஸகல சராசரங்களின் ஹ்ருதயத்திலும் அந்தர்யாமியாக வஸிக்கும் பகவான் எனது கனவில் தோன்றித் தமது திவ்ய ஸேவையைக் காட்டருளினார். [கண்களிலிருந்து ஆநந்தக் கண்ணீர் பெருக்குகிறாள்.]

சது:—[பஹுமானத்துடன்] ஆஹா! உனது பாக்யமே பாக்யம்! ப்ராக்ருத ஜனங்களுக்குத் துர்லபமாகிய அஹோபிலேசன் தனது திவ்யமங்கள விக்ரஹ ஸேவையை யல்லலோ உன் கண்முன் காட்டியருளினான்? ஆம்; பல வகை வேஷங்களைத் தரிக்கும் அந்த நடன் உனக்கு எத்தகைய வேஷத்தில் தென்பட்டான்?

வாஸ:—[தன்னுடைய திவ்யானுபவத்தை பஹுமானித்தவளாய்] நான் ஸேவித்த அத்புத ரூபத்தைக் கூறுகிறேன் கேள். நீல மேக ச்யாமளன், சங்க சக்ர கதாதரன், நான்கு திருத்தோள்களில் விளங்கும் திவ்யாபரணங்கள், திரு மார்பில் சோபிக்கும் ஸ்ரீவத்ஸம், திருச் செவிகளில் விளங்கும் மகரிகா குண்டலங்கள், திருவரையில் மின்னும் பீதாம்பரம், வல மார்பினில் ஸ்ரீ தேவி கௌஸ்துபம்,—இவ்விதம் அஹோபிலேசன் திவ்ய ஸேவை தந்தருளினான். பக்தி மேலீட்டால் அவள் சரீர முழுவதும் மயிர்க் கூச்சல் நிறைகின்றது.

சது:—ஸகி! வாஸந்திகே! உன் அருமை பெருமைகளை நீ அறியாய்! நீ ஸாக்ஷாத் லக்ஷ்மியின் அம்ஸமல்லவா? தேவாதிதேவனுகையால், அவன் உன் அன்பைப் பெறுவது ஒரு காரணம். நீ பிறந்த குலத்தைப் பஹுமானிப்பது மற்றொரு காரணம். உன் ஸௌந்தர்யச் சுழலில் அவன் அகப்பட்டான். நீ கனவில் கண்டு வர்ணித்த திவ்ய ரூபத்தை அநாதரித்து வேடுவ வேஷத்தைப் பரிக்ரஹித்தான். ஆஹா! வந தேவதையின் அநுக்ரஹத்தினால் நீ இப்பொழுது விரும்பிய வரனை அடைந்தே விட்டாய். இனி உனது எண்ணம் நிறைவேறுவதில் என்ன ஸந்தேஹம்?

வாஸ:—[சலிப்புடன்] ஆமாம்; எனது எண்ணம் கை கூடினாற்போலத் தான். ஸ்வப்நத்தில் ஸேவித்தால் மாத்ரம் பகவானை மணம் புரிந்ததாக ஆய் விடுமா? பலாச மரத்தில் மலர் கண்ணுக்கு அழகே யன்றிக் கனி கிடையாது

என்று அறியாத மேதாவிகள் புஷ்பத்தைக் கண்டு பழம் கைக்கு எட்டிய தென்று மகிழ்வதுபோல் இருக்கின்றது என் நிலை.

சது:—தோழீ! இன்னமும் உனக்கு நம்பிக்கை யில்லையா? உனது ஸந்தேஹத்தை அறவே ஒழிக்கக்கூடியவள் முக்காலமும் அறிந்த விஜ்ஞாந வதியே ஆவள். அநேகமாக இப்பொழுது அவள் வரும் வேளை. அவளைக் கேட்ட பிறகாவது உனது சிந்தை தெளிவுறுமோ என்னவோ பார்க்கலாம். [விஜ்ஞாநவதி வருகிறாள்.]

விஜ்ஞாநவதி:-[வெகு தூரத்தில் வாஸந்திகாவைப் பார்த்து] அதோ வெட்டிவேறினால் மேல்கட்டு மேய்ந்த லதா மண்டபத்தில் படுத்திருப்பவள் யார்? இது என்ன கோலம்! நமது ராஜகுமாரியா! அடையாளமே அழிந் தல்லவோ தென்படுகிறாள்? ஆம், இளவரசி தான்; ஸந்தேஹமே இல்லை.

"தோழிகளுடன் மெதுவாக ஏதோ பேசுகிறாள் அதிகமாய் ஆபரணங் கள் ஒன்றையும் காணோம். கழுத்தில் ஒரே ஒரு ஹாரம். காதில் தோடு. ஏன் இவ்விதம் விளங்குகிறாள்? ஏதேனும் நோயுற்றனளோ?" [இவ்வாறு எண்ணிக்கொண்டே அவர்கள் ஸமீபத்தை அடைகிறாள்.]

[அவளைக் கண்டதும் வாஸந்திகையும் தோழியும் பந்துபோல் துள்ளி எழுந்து நமஸ்கரிக்கின்றனர்.]

விஜ்ஞா:—குழந்தாய்! வாஸந்திகா! சீக்ரமாக உன் ஆசைக்குகத் தகுந்த கணவனை அடைவாய் [என்று ஆசீர்வதிக்கிறாள்.]

[ஸகிகள் முகத்தில் நம்பிக்கையும் ஆநந்தமும் ப்ரதிபலிக்கின்றன. அவர்கள், 'தாயே! தங்களுடைய ஆசீர்வாத ப்ரபாவத்தினால் தேவி தன் அன்பனை அதி சீக்ரம் அடையவேண்டும்" என்றனர்.

[வாஸந்திகா ஆசீர்வாதத்தை அங்கீகரித்தவள்போல் லஜ்ஜையினால் தலை குனிந்து நிற்கிறாள்.]

விஜ்ஞா:—[வாஸந்திகாவைக் காலோடு தலை உற்று நோக்கி இப்பெண் ணின் கடைக் கண்கள் ஒரு பொருளையும் கவனியாமல் அயர்ந்து விளங்கு கின்றன. வைர மணிக ளிழைத்த காதணிகளின் காந்தியினால் இரு கன்னங் களும் வெளுத்துப் பளபள வென்று மின்னுகின்றன. சரீரமும் துரும்பாய் இளைத்துள்ளது. ஆனால் ஶோபையோ சற்றும் குன்றவில்லை. இவ்வடை யாளங்களைப் பார்த்தால், ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாளெனத் தெரிகின்றது.

[இவ்விதம் நினைத்துக்கொண்டே அருகில் சென்று உட்கார்ந்தாள்.]

[ஸகிகள் இருவரும் ஒருவருக்கொருவர் ரஹஸ்யமாய்] நாம் இப்பொது எது மறியாதவர்கள்போல் பகவதியைக் குறி கேட்போம். அப்போது அவர்

என்ன சொல்லுகிருரோ பார்க்கலாம்.' [வெளிப்படையாய்,] தாயே ! பகவதீ ! எங்கள் ஸகியினுடைய துக்கத்தின் காரணம் யாதென்பதை அறிந்து கூற வேண்டுகிருேம். தாங்கள் முக்காலமும் அறிந்த ஞானியன்ருே ! க்ருபை கூர்ந்து அந்நோயின் பரிஹாரமும் கூறவேண்டும். [பிறகு விஜ்ஞானவதியின் சிஷ்யையின் கையிலிருந்த சோழி நிறைந்த பையை வாங்கி பகவதியின் கையில் வணக்கத்தோடு கொடுக்கின்றனர்.]

விஜ்ஞா :—[அதைப்பெற்றுக் கண்களை மூடி] 'பகவதீ! தேவீ! உன்னை வேண்டுகிறேன். உன் பக்தையாகிய என்மீது அருள்புரிய இதுவே தருணம். இப்பெண்மணியின் மனத்தில் உள்ள எண்ணம் அனைத்தும் எனதுள்ளத்தில் பளிங்குபோல் விளங்குமாறு அருள் புரியக்கடவாய்.' [தனதிஷ்ட தேவதையை வணங்கிப் பலகையின்மேல் சோழியை வரிசை வரிசையாகப் பரப்புகிருள்.]

வாஸந்திகா:—[மனத்திற்குள்] ஆஹா ! இது என்ன அத்புதம் ! என்ன ஆச்சர்யம் ! எனது இஷ்டதேவதையின் அநுக்ரஹத்தை நான் என்னவென்று கூறுவேன் ! கனவிலும் அறியாத ஸகல விஷயங்களையும் ப்ரத்யக்ஷமாய்ப் பார்க்கிறேன் ! [மறுபடியும் மந்தஹாஸம்] இதென்ன விந்தை! நம்பக்கூடிய செய்கையா? அஹோபிலேஶனுடைய கபடநாடகம் எத்தகையது !

இக்கந்நிகையின் ஸங்கீத அமுதத்தைச் செவிகளாரப் பருகிக் களித்த லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஆநந்தக்கடலில் ஆழ்ந்தான். [அப்போதேதான் அவளைப் பஹுமானித்துப் பாணிக்ரஹணம் செய்துகொள்வதாய் வநதேவதை எழுதியது போல் ஒரு பத்ரிகை எழுதி அவள் முன்னிலையில் ரஹஸ்யமாக எறிகிருர்] இருக்கட்டும். இது தேவரஹஸ்யம். அவச்யம் மறைக்கத்தக்கது. விஷயம் கூறினல் ரஸமும் குறையும். இச்சந்தர்ப்பத்துக்குத் தக்க பதில் அளிப்போம். [ப்ரகாசமாய்] குழந்தை வாஸந்திகா அல்லவோ தந்யை! பெண்ணுகப் பிறந்தவர்களில் அவள் அத்ருஷ்டம் எவர்க்குக் கிட்டும்? வநதேவதையானவள் அவளுடைய மதுரமான ஸங்கீதத்தைக் கேட்டு சதுரிகா இடை மறுத்து.

வாஸந்திகா ! சற்று ஸாவதாநமாய்க் கேள். உன் மாநத்தைப் பற்றிய விஷயமே ப்ரஸ்தாவிக்கிறதுபோல் தோன்றுகிறது. விஜ்ஞாநவதி மிகவும் ஸந்தோஷத்தை அடைந்து விலை மதிப்பற்ற ஒரு வரத்தை அருளினர்.

வாஸந்திகா:—[தனக்குள் பரபரப்புடன்] ஒன்றும் விளங்கவில்லையே! மேலே என்ன சொல்லப்போகிருளோ அன்னை விஜ்ஞாநவதி.

விஜ்ஞா:—அவருக்கு நிகர் மனிதர்களில் இல்லை; தேவர்களில் முதலே இல்லை.

ப்ரமரிகா.—ஸகீ! வாஸந்திகா! கேட்டனையல்லவா! உனது சிந்தையாகிய கொடியில் மலர் மலரும் தருணம் கிட்டியது.

விஜ்ஞா—[பக்தி மேலிட்டு மயிர்கூச்சல் அடைந்தவளாய்] அத்தேவாதி தேவன் புருஷோத்தமனை யாரென்று எண்ணுகிறாய்? அஹோபில சக்ரவர்த்தி யாகிய ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹன். அப்புருஷோத்தமனையே வரனாக நீ அடையப் போகிறாய்.

வாஸந்திகா—ஆஹா! பாக்யம். பகவதி நன்றாக அநுபவித்துக் கூறினாள். பக்கத்திலிருந்து ஸகல விஷயங்களையும் நேரில் பார்த்ததுபோ லல்லவோ கூறினாள்! [மறுபடியும் வணக்கமும் மதிப்பும் தோன்ற] தாயே! அதன் பிறகு என்ன நடந்தது? அதற்குமேல் என்ன நடக்கப்போகிறது? அனைத்தையும் அருள வேண்டுகிறேன்.

விஜ்ஞா—மறுபடியும் ஒரு ஸமயம் பகவான் உனது கனவில் திவ்ய காட்சி அளித்தார். விநோதயாய் ஸரஸ ஸல்லாபங்கள் நடந்தன. இன்ப வெள்ளத்தில் நீந்தினீர்கள். அவ்வளவுதான். அதுமுதல் மந்மதனென்கிற க்ரஹம் பிடித்து உன்னைப் பல வகையில் ஆட்டிவைக்கிறது. சில ஸமயம் அறிவிழந்து கட்டைபோல் கிடக்கிறாய். மேலும் ஒரு காரணமும் இல்லாமல் 'இடியிடி' என்று சிரிக்கிறாய். அடிக்கடி நெருப்புப்போன்ற நீண்ட பெருமூச்சு எறிகிறாய். யாருமற்ற ஆகாயத்தை அடிக்கடி நோக்குகிறாய். யாரோ நேரில் நிற்பது போல் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமற்ற பேச்சுக்களைப் பேசுகிறாய். அடிக்கடி சிந்தையினால் வெகுநேரம் மோஹத்தை அடைகிறாய். உடல் உலர்ந்து வாடி வதங்கித் தவிக்கிறாய். ஆஹா! வாஸந்திகா! என்னே உன் நிலைமை!

ஸகிகள்—[நம்பிக்கையும் பஹுமானமும் கொண்டவர்களாய்] தாயே! தாங்கள் உரைத்தது அனைத்தும் உண்மை. ஞானியாகிய தங்கள் மஹிமையை யாவர் அறிவார்? மற்றொரு விண்ணப்பம். இப்போது நம் வாஸந்திகாவைத் தேவாதி தேவனாகிய லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் பாணிக்ரஹணம் செய்துகொள்வாரா? அல்லது கபடநாடக ஸூத்ரதாரி இவளை இவ்விதமே தவிக்குமாறு செய்வாரா? தயைசெய்து அதையும் அருளவேண்டும். எங்கள் ஆருயிர் நேசியின் அத்ருஷ்டத்தை அறிய ஆவல் கொண்டுளது எங்கள் உள்ளம்.

விஜ்ஞா—[மறுபடியும் சோழியைப் பரப்பி] ஆஹா! அதற்கென்ன ஸந்தேஹம்! சற்றும் அஞ்சவேண்டாம். தேவாதிதேவன் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் வாஸந்திகாவை அவச்யம் மணம் புரிவான். மேலும் இப்போது அவர் ஆராத காதல் நோயினால் வருந்துவதுபோல் தோன்றுகிறது.

9245 வாஸந்திகா—எந்தப் பாக்யவதிமேல் மோஹம் கொண்டுளாரோ தேவன்?

ஸகிகள்—அடடா! இதற்கென்ன கவலை! இவ்வளவு விவரமாய்க் கூறிய பகவதிக்கு அவ்விஷயத்தைக் கூறுவது ஒரு பொருட்டா? தாயே! எம் பெருமான் யார்மேல் மோஹம் கொண்டுளார்? உங்கள் திருஷ்டியால் தோழியின் ஆவலைத் தணிக்க வேண்டுகிறோம்.

ஸ்ரீ:

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '48 மார்ச்மீ-த்துச் சந்தா வஸூல்

| | | | | ரூ. |
|---|---|---|---|---|
| 17 | ஸ்ரீ | R. A. சேஷாத்ரி, மயிலாப்பூர் | ... ... | 3 |
| 26 | ,, | V. V. ஐயங்கார், க்ரிண்ட்லே கம்பெனி, பம்பாய் | ... | 3 |
| 27 | ,, | R. லக்ஷ்மீ நாராயணன், கல்கத்தா | ... ... | 3 |
| 34 | ,, | A. ஸ்ரீநிவாஸ ராகவையங்கார், ஸ்ரீரங்கம் ... | ... | 3 |
| 40 | ,, | C. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கும்பகோணம் | ... | 6 |
| 67 | ,, | T. S. பிச்சுவையங்கார், திருக்குறுங்குடி ... | ... | 3 |
| 120 | ,, | S. செல்லம்மாள், தேனும்பேட்டை, சென்னை | ... | 3 |
| 138 | ,, | R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸெகந்த்ராபாத் | ... | 3 |
| 170 | ,, | T. தோதாத்ரி ஐயங்கார், தெப்பகுளம், திருச்சி | ... | 3 |
| 182 | ,, | V. S. ராகவாசாரி, தி. நகர், சென்னை | ... ... | 3 |
| 184 | ,, | M. B. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம் | ... | 5 |
| 294 | ,, | I. ஸ்ரீநிவாஸாசாரியர், சைதாப்பேட்டை ... | ... | 1 |
| 332 | ,, | S. ஸ்ரீநிவாஸாசாரியர், மோஹனூர் | ... ... | 3 |
| 374 | ,, | V. ரங்கஸாமி ஐயங்கார், அம்மாபேட்டை... | ... | 3 |
| 390 | ,, | P. K. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், திண்டிவனம் | ... | 3 |
| 424 | ,, | R. குப்புஸாமி ஐயங்கார், எமப்பூர் | ... ... | 3 |
| 450 | ,, | V. K. ஐயங்கார், இந்தூர் ... | ... ... | 3 |
| 451 | ,, | K. R. ஸ்ரீநிவாஸையங்கார், தென்னூர் ... | ... | 3 |
| 513 | ,, | S. M. க்ருஷ்ணமாசார்யர், புதுடெல்ஹி ... | ... | 3 |
| 648 | ,, | வேதவல்லி அம்மாள், கொடவாசல் | ... ... | 3 |
| 676 | ,, | க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், P.W.D. தஞ்சை ஸர்க்கில் | ... | 3 |
| 703 | ,, | V. B. நாராயணன், புது டெல்ஹி | ... ... | 3 |
| 755 | ,, | G. K. ராமஸ்வாமி, புது டெல்ஹி | ... ... | 3 |
| 801 | ,, | S. ரங்கஸ்வாமி ஐயங்கர், மாதுங்கா | ... ... | 3 |
| 803 | ,, | K. V. வேங்கட க்ருஷ்ணமாசார்யர், மதுரை | ... | 3 |

மொத்தம் ரூ. 78

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

**விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.**

| | | சந்தாதாரர்களுக்கு ரூ. அ | மற்றவர்கட்கு ரூ. அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது] | 6—8 | 7—8 |
| 2. | உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி) | 0-12 | 1—0 |
| 3. | உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,, | 0—8 | 0-12 |
| 4. | வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி) | ... 1—0 | 1—8 |
| 5. | ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) | ... 0—8 | 0-12 |
| 6. | ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி) | 0—3 | 0—4 |
| 7. | ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி) | 2—0 | 3—0 |
| 8. | ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்) | 1—0 | 1—8 |
| 9. | ஸ்ரீ காமாஸிகாஷ்டகம், ஸ்ரீ வேகாஸேது ஸ்தோத்ரம் [க்ரந்த லிபி ; தமிழ் உரையுடன்] | 0—7 | 0—8 |

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

**மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

**நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை.**

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevacharia, 22, Mahalakshmi Street, Tyagarayanagar, Madras.